பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை
ரூபா
15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 09 வியாழக்கிழமை (24.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 239

# தமிழருக்கு சுயநிர்ணய உரிமையா? அதனை ஒருபோதும் அரசு ஏற்காது!

## வேண்டுமானால் அதிகாரப் பகிர்வு மூலம் ஏதேனும் செய்யலாம்



கொழும்பு, ஜூலை 24

"தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு வழங்குவதை அரசு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. வேண்டு மானால் அதிகாரப் பகிர்வு அடிப்படையில் ஏதேனும் செய்வது பற்றி யோசிக்கலாம். அதற்கு அப்பால் வேறு கூடுதல் உரிமைகள் எவற்றையும் தருகின்ற எண்ணம் அரசுக்கு கிடையவே கிடையாது.

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் சபை முதல்வரும் சிரேஸ்ர அமைச்சருமான நிமால் சிறிபால டிசில்வா.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உரிய தீர்வை தரமுடியாவிடின் எங்களை சுயநிர்ணய அடிப்படையில் வாழ விடுங்கள்

## தனிநாட்டுக் கோரிக்கை தமிழ் மக்களின் கோரிக்கை; புலிகளினுடையது அல்ல



கொழும்பு,ஜூலை24

தமிழர்களின் பிரச்சினைக்கு உரிய அரசியல் தீர்வை முன் வைக்க முடியாவிட்டால் அவர்கள் பிரிந்து சென்று அவர்க ளின் உள்ளக சுயநிர் ணயத்தின்படி செயற் பட அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எம்.பி.யுமான ஆர். சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

தனி நாட்டுக் கோரிக்கை என்பது புலிக ளின் கோரிக்கை அல்ல என்றும் அது தமிழ் மக்களின் கோரிக்கை என்றும் அவர் கூறினார்.

தமிழர்களின் சுயநிர்ணயம் ஏற்றுக் கொள்ளப்படுவதன் மூலமே தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று சர்வதேச சமூகம் கூறுகின்றது என்றும் அவர் சொன்னார்.

தற்போதைய வடக்கு - கிழக்கு நிலைமை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து அதன் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் யுவதி சுட்டுக் கொலை!

கொழும்பு, ஜூலை 24

மட்டக்களப்பு, காத்தான்குடியில் உள்ள பூநொச்சிமுனைப் பகுதியில் நேற்று அதிகாலை 18 வயதுடைய இளம் யுவதி ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த யுவதியின் சடலம் நேற்று மாலை வரை அடையாளங் காணப்படவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நேர மாற்றம் குறித்து போதிய முன்னறிவித்தல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

குடாநாட்டில் இன்று இரவு ஊரடங்கு நடைமுறைக்கு கொண்டுவரப்படும் நேரம் நண்பகல் 12 மணிக்கு முன்னர் பொதுமக் களுக்கு அறிவிக்கப்படும்.

பலாலி ஊடகப்பிரிவு பொறுப்பாளர் மேஜர் விஜயசிங்க நேற்றிரவு இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமையும் இரவு 7 மணிக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்ட ஊரடங்கு இன்று அதிகாலை 4.30 மணிக்கு நீக்கப்படும் என்றும் அவர் தெரி வித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புளொட் உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூலை 24

வவுனியா வேப்பங்குளப் பகுதியில் நேற்று இளம் வர்த்தகர் ஒருவர் அடையாளந் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மூக்கன் சுரேஸ் (வயது - 33) என்ற வர்த்தகரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

வேப்பங்குளம் சித்திவிநாயகர் ஆயலத் திற்கு முன்னால் அமைந்துள்ள அவரது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் வன்னியில் இடம்பெயர்ந்து பெரும் அவலத்தில்!

## மரங்களின் கீழ் சேற்று நிலத்தில் உண்டு; உறங்குகின்றனர்

கிளிநொச்சி, ஜூலை 24

வடக்கில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசபடைகள்மேற்கொண்டுள்ளஇராணுவ நடவடிக்கை காரணமாக ஒரு லட்சத்துக் கும் மேற்பட்ட மக்கள் வன்னிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ளதாக விடுதலைப் புலிக ளின் சமாதானச் செயலகம் தெரிவித்திருக் கின்றது.

வன்னிப்பிரதேசத்தின் மீது விதிக்கப் பட்டுள்ள பல்வேறு தடை நடவடிக்கை களினால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான அவசர நிவாரண உதவிகளை வழங்குவதில் உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கியிருப்பதாகவும் சமாதானச் செயலகம் அறிவித்தி ருக் கிறது.

இடம்பெயர்ந்துள்ளவர் களில் 35,000 பேர் முன் பள்ளிகளுக்குச் செல்லும் சிறுவர்கள்உள்ளிட்ட மாணவர் கள் என்றும் இடப்பெயர்வு காரணமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டிருப்ப தாகவும் தெரிவிக்கப்பட்டி ருக்கின்றது.

**உணவுப் பொருள்களையும் வழங்க முடியவில்லை**

அரசாங்கம் வன்னிப் பிர



சேற்று நிலத்தில் உண்டும் உறங்கும் அவலம்

தேசத்தில் பொருள்களுக்கான தட்டுப் பாட்டைச்செயற்கையாக ஏற்படுத் தியிருப் பதனால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உடனடிதேவையாகிய உணவுப் பொருள் களைக் கூட வழங்க முடியாத நிலையேற் றப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கை யில் குறிப் பிடப்பட்டிருக்கின்றது.

வன்னிப் பிரதேசத்திற்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை அப்பகுதிக் குக் கொண்டு செல்வதில் உள்ள நடை முறைச் சிக்கல் காரணமாக அங்குள்ள பெரும எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்த மக் களுக்கான அவசர நிவாரண உதவிகளைச் செய்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதுடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில்
## (ஈழத்துச் சிதம்பரம்)
### வருடாந்த தேவி மகோற்சவம் - 2008

சிவநேயச் செல்வர்களே!
நிகழும் சர்வதாரி வருடம் ஆடி மாதம் 11 ஆம் திகதி (26.07.2008) சனிக்கிழமை வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் சிறப்பாக நடைபெற திருவருள்பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் யாவரும் திரளாக வருகைதந்து மகோற்சவத்தைக் கண்டுகளித்து தேவியை வணங்கி இஷ்ட சித்திகளைப் பெற்றேகுக.

### மகோற்சவ கிரியை விவரம்

26.07.2008 சனிக்கிழமை: காலை 6.30 மணிக்கு அபிஷேகம், மு.ப. 10.30 கொடியேற்றம். இதனைத் தொடர்ந்து அம்பாள் இடபவாகனத்தில் திருவீதி உலா வருதல்.

01.08.2008 வெள்ளிக்கிழமை: ஆடி அமாவாசை விசேட பூசை வழிபாடுகள்.

03.08.2008 ஞாயிற்றுக்கிழமை: தேர்த்திருவிழா, காலை 6.30 மணிக்கு அபிஷேகம்,காலை 8.30 மணிக்கு வசந்தமண்டபூசை,காலை 9.30 மணியளவில் அம்பாள் தேருக்கு எழுந்தருளல்.

04.08.2008 திங்கட்கிழமை: ஆடிப்பூரம், தீர்த்த உற்சவம். காலை 7 மணிக்கு அபிஷேகம், காலை 9.00 மணிக்கு வசந்தமண்டபூசை, காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவம், மாலை 7.30 மணிக்கு கொடியிறக்கம்.

தினமும் காலைத் திருவிழாவில் 8 மணிக்கு அபிஷேகம், 9 மணிக்கு பூசை, 9.30 மணிக்கு தம்பபூசை, 10.30 மணிக்கு வசந்த மண்டபபூசையைத் தொடர்ந்து அம்பாள் திருவீதி உலா வருதல், மாலைத்திருவிழாவில் 5.00 மணிக்கு பூசை, 5.30 மணிக்கு தம்ப பூசை, 7.30 மணிக்கு வசந்த மண்டபூசையைத்தொடர்ந்து சுவாமி திரு வீதி உலா வருதல் என்பன இடம்பெறும்.

காரைநகர். ஆதீன கர்த்தாக்கள் ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம்.


# தென்மராட்சியில் ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் கருத்தரங்கும் நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் காலை 8.30மணி முதல் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை இந்த அமர்வில் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தெரிவித்தார். (1)

# கயிறு இழுத்தல் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 24

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி சாவகச்சேரி பிரதேச சபை, உத்தியோகத்தர், ஊழியர்களிடையே நடத்தும் கயிறு இழுத்தல் போட்டி இன்று காலை கொடிகாமத்தில் உள்ள தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றையதினம் பொது அறிவுப் போட்டியும் நடத்தப்படவுள்ளதாக பிரதேச சபை செயலாளர் வி.சிவராஜலிங்கம் தெரிவித்தார். (1-131)


## வெள்ளிவிழா நாயகன் Rev.G.நடராஜாவை வாழ்த்துகின்றோம்


Rev.G.நடராஜா

வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியின் வளர்ச்சி-அபிவிருத்திக்கு முன்னின்று உழைத்து ஆரம்ப பாடசாலையின் அதிபராகவும், கல்லூரியிலும், திருச்சபையிலும் பல பதவிகளை வகித்து பல பட்டப்பின் படிப்புகளை M.A.,Pub.Ad., M.Ed. (Eng.Medium), PG Dip. Ed. பெற்று விசேட தரம் ஒன்றில் (Special Post Gr-1) பதவி உயர்வு பெற்று, வெள்ளிவிழாக் காணும் கல்விமான் வணக்கத்துக்குரிய ஜீ.நடராஜா ஆசானை மனதார வாழ்த்துகின்றோம்.

Navaly. தலைவர், நிர்வாகிகள், HSCMF.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சக ஆசிரியர்
நடராசா ஸ்ரீ ரங்கநாதன் அவர்களின்
பாசமிகு பெரியதாய்

### வேலாயுதர் அங்கயம்

அவர்களின் (23.07.2008) மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம், யா/மிருசுவில் அ.த.க.பா.

# சடலத்தை அடையாளம் காணுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 24

இளவாலைப் பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ள ஆணின் சடலத்தை அடையாளம் காணும்படி யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். இது தொடர்பாக பணிப்பாளர் விடுத்துள்ளசெய்திக்குறிப்பில்,

வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள இச்சடலம் இது வரை எவராலும் உரிமை கோரப்படவில்லை. அவருடன் இருந்த அடையாள அட்டையின் படி அவரது பெயர் பொன்னுத்துரை விஜயரத்தினம் வயது 34, நகுலேஸ்வரர் வீதி, கீரிமலை, தெல்லிப்பழை என உள்ளது. உரித்துடையோர் இச்சடலத்தை 5 நாள்களுக்குள் அடையாளம் காணும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் - என்றுள்ளது. (1)

# "தகவல் களம்" சஞ்சிகை இன்று வெளியீடு

மந்திகை, ஜூலை 24

பருத்தித்துறை ஜெஸ்வின் கணனி மாணவர் அபிவிருத்திக்குழுவின் "தகவல் களம்"சஞ்சிகைவெளியீட்டுவிழாஇன்றுவியாழக்கிழமை பருத்தித்துறை சிவன்கோயில் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் விழாவிற்குத்தலைமை வசிக்கிறார். பருத்தித்துறை பங்குத்தந்தை அருட் திரு. ஜே.எக்ஸ்.பேணாட்றெக்னோ அடிகளார் ஆசி வழங்குவார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவநேசன், தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை இணைப்பாளர் கே.கிருஸ்ணபாலன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (1-218)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இலட்சுமிபிள்ளை சோமசுந்தரம் (இலட்சம்)



காரைநகர், கோவளத்தை பிறப்பிடமாகவும், அப்புத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிபிள்ளை சோமசுந்தரம் (இலட்சம்) (22.07.2008) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், கனகசுந்தரலிங்கம் (சுந்தரம் ஸ்டோர்ஸ் - அப்புத்தளை), அருளானந்தம் (சுந்தரம் ஸ்டோர்ஸ் - அப்புத்தளை), இராஜேந்திரம் (பிரான்ஸ்), திருநாவுக்கரசு (பிரான்ஸ்), நாகேஸ்வரி (பண்டாரவளை), லோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகாம்பிகை, ஜோதிமலர், இராஜேஸ்வரி, சசிலதா, கணேசன் (பிள்ளையார் டிரேட்சென்டர், பண்டாரவளை), சிவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், செந்தில்குமார், சுபாங்கி, தனுஷன், விதுஷன், அருச்சுனா, பிரசன்னா, அபிசன்னா, உமா தர்ஷினி, அருள் செந்தில், தயானந்தன், அபிராமி, மதுசன், மதுரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (24.07.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அப்புத்தளை நகர பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பாடு, தங்கோடை, காரைநகர். தகவல்: சிவகுமாரன் விக்னேஸ்வரி (மருமகள்)

## திருமதி வேலாயுதர் அங்கயம்



இடைக்குறிச்சி, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் அங்கயம் நேற்று (23.07.2008) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர்-கதிர்காமிப்பிள்ளை தம்பதியினரின் மகளும், அம்பலவாணர், விஸ்வநாதர், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீ விஸ்வநாதன் (லண்டன்), ஸ்ரீ ரங்கநாதன் (ஆசிரியர், யா/மிருசுவில் வடக்கு அ.த.க.பாடசாலை), ஸ்ரீ ரஞ்சனி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், மதிவதனி (லண்டன்), திலகேஸ்வரன், இளம்பிறைநாதன், திருக்குமரன் (லண்டன்), செவ்வானந்தி (ஆசிரியை, யா/சாவகச்சேரி இ.ஆ.பாடசாலை) ஆகியோரின் மாமியாரும் சர்மிலன் (லண்டன்), சரண்யன் (லண்டன்); பலராம் (லண்டன்), சீதாராம் (லண்டன்), மாதங்கி (மாணவி, தரம் 1, யா/சாவகச்சேரி இ.ஆ.பாடசாலை), வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.07.2008) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் மாசேரி சாளம்பை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைக்குறிச்சி, வரணி. (சி/553871) தகவல்: ந.ஸ்ரீரங்கநாதன் (பெறாமகன்)

## திருமதி சிவகாமிப்பிள்ளை தெய்வேந்திரகுமாரசாமி



முதலியார்வளவு, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை தெய்வேந்திரகுமாரசாமி நேற்று (23.07.2008) புதன்கிழமை கோப்பாயில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வேந்திரகுமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - வள்ளியம்மைப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், தம்பிப்பிள்ளை - வள்ளியம்மைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கனகசபை, மயில்வாகனம், ஞானசௌந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தம்பிப்பிள்ளை, ஜெயக்குமார், நந்தகுமார், திருக்குமார், விக்கினேஸ்வரி, சிவனேஸ்வரி, ஞானக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பிற்கு இன்று (24.07.2008) காலை 6 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி, கோப்பாய். தகவல்: மு.சு.மயில்வாகனம் (சகோதரர்).

## திருமதி அருணாசலம் விசாலாட்சி

திருமதி அருணாசலம் விசாலாட்சி நேற்றுமுன்தினம் (22.07.2008) செவ்வாயன்று காலமானார்.

அன்னார் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த விசுவர்- பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த அமரர் அருணாசலத்தின் அன்பு மனைவியும், சிவஞானம் (லண்டன்), அருணதேவன்(கருணா) அவர்களின் பாசமிகு தாயும் உருத்திராதேவியின் அன்பு மாமியாரும், லியாணி, லக்ஷனா, யிந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. (76606) தகவல்: அருணதேவன்(கருணா மகன்)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கனகசபை (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கரவெட்டி மேற்கை பிறப்பிடமாகவும் கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகசபை நேற்று (23.07.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் இராஜேஸ்வரி, தனேஸ்வரி, இராஜேஸ்வரன் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணபதிப்பிள்ளை, திருப்பதி, சுகந்தன் (டோகா), உமாதேவி ஆகியோரின் மாமனும், சுப்பிரமணியம், சின்னம்மா ஆகியோரின் சகோதரரும், மோகனதாஸ் (டோகா), மதிராஜ் (பிரான்ஸ்), யமுனா, யசோ, யனதா, சிந்துயா, அனித்தா, கோபிந், ஜங்கரன், சோபிதா, மதிசூதனன், பூமிகா, உமேஸ், கேசிகா ஆகியோரின் பேரனும், பவித்திரா, கிசானி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2008) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருக்கள் பகுதி, கரணவாய், கரவெட்டி. (A) தகவல் குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

சச்சிதானந்தமூர்த்தி ஜெயானந்தன் என்பவரது தேசிய அ.அட்டை (810225050V), மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், ரக்ஸ், இராணுவப் பாஸ், வட்டக்காட், போட்டோ றிசீட் என்பன அடங்கிய பேஸ் 22.07.2008 அன்று கனகம்புளியடிச் சந்திக்கும், வேம்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பெற்றோல் செற் அருகு ஒழுங்கை, பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே: 0774420071


## விசேட சிறப்புச் சலுகை

கொம்ப்யூட்டர் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

- Diploma in Ms Office
- Diploma in Web Design
- Dip in Desktop Publishing
- Dip in Computerised Accounting

Select any Course & pay 3900/=only

இலவச பாடநூல்கள் மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ்களுக்கான பாடநெறிகள்.

கணக்கியல் துறையில் ஓர் புதிய பரிமாணம்

Certified Computer Accountant

Tally ies 9.0 — 50% Special Offer

உலகின் முன்னணி Accounting Software

A/L மாணவர்கள், HNDA, AAT, பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடையவர்கள் அனைவருக்குமான கட்டணச்சலுகை.

ASIAN- CSC COMPUTER EDUCATION

2G,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel 222-5677 | கிளை : கொடிகாமம் வீதி, நெல்லியடி Tel 077-3122198


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் பரிசளிப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, கல்லூரி அதிபர் அருட்தந்தை எம்.ஜெறோ செல்வநாயகம் ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக விஞ்ஞானப் பிரிவுத் தலைவர் ஜே.சி.நிகால் ராஜேந்திர மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை நான்காவது படத்திலும் காணலாம். (111)

## கிணற்றில் வீழ்ந்து கைமுறிந்த நிலையில் மறுகையின் உதவியுடன் மேலே வந்த இளைஞன்

யாழ்ப்பாணம், ஜூலை 24

30 அடி ஆழமான கிணற்றில் வீழ்ந்து கை முறிந்த நிலையில் உதவி கிடைக்காததால் மற்றக் கையினால் படிகளில் பிடித்து கிணற்றிலிருந்து மேலே வந்தார் இளைஞர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் சாவகச்சேரி கற்குளிப் பகுதியில் இடம்பெற்றது.

குளிக்கச் சென்ற வேளையில் தவறி கிணற்றுக்குள் வீழ்ந்த போது கை முறிந்ததாகவும், அயலவரின் உதவி கிடைக்காததால் சுமார் ஒரு மணிநேரம் முயற்சி செய்து கிணற்றிலிருந்து வெளியே வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சாவக்ச்சேரி தபாற் கந்தோர் வீதியைச் சேர்ந்த நடேசமூர்த்தி பிரதீபன் (வயது 25) என்னும் இளைஞனே கிணற்றில் வீழ்ந்தவராவார்.

கைமுறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (203-207)

## கிழக்கில் சில பொலிஸ் அதிகாரிகள் பாரபட்சமாகச் செயற்படுகின்றனர்

### ஈ.பி.டி.பி.குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 24

கிழக்கில் சில பொலிஸ் அதிகாரிகள் பாரபட்சமாகச் செயற்படுகின்றனர் என்று ஈ.பி.டி.பி.யினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிழக்கு மாகாணத்தில் எமது அரசியல் செயற்பாடுகளை முடக்கும் தீய நோக்கத்துடன் வெளியிடப்படும் செய்திகளை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

செங்கலடியில் எமது உறுப்பினர்கள் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு சந்தோகத்தின் பேரில் சிலர் கைதும் செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் முடிவிலேயே உண்மைகள் தெரியவரும். எனவே, நீதிமன்ற விசாரணையில் இருக்கும் விடயம் தொடர்பில் நாளுக்கு நாள் பொறுப்பற்ற செய்திகளைக் கூறும் தீய சக்திகளின் கபட நோக்கத்தை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது கட்சி உறுப்பினர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அதற்கான தண்டனையை சட்ட ஒழுங்குக்கு அமைய ஏற்றுக்கொள்வதில் நாம் ஆயத்தமாகவே இருக்கிறோம்.

எவரொருவர் கொலை செய்யப்படுவதையும் எவரொருவர் மிரட்டப்படுவதையும் நாம் கண்டிக்கின்றோம்.

பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் அத்தகைய செயற்பாடுகளை எவர் செய்தாலும் நாம் கண்டிக்கின்றோம்.

அத்தகைய செயற்பாடுகளில் எமது கட்சி உறுப்பினர்கள் ஈடுபட்டால் அதற்காக கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் தேவை ஏற்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கவும் நாம் பின்நிற்கப் போவதில்லை.

இதேவேளை, வாழைச்சேனையில் வைத்து எமது உறுப்பினரான காளியப்பன் குணசீலன் கடந்த 19.06.2008 அன்று ரி.எம்.வி.பியின் அஜித் தலைமையிலான குழுவினரால் கடத்தப்பட்டார். இது தொடர்பில் நாம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தோம்.

பின்னர் 27.06.2008 அன்று கடத்தப்பட்ட எமது உறுப்பினரின் சடலம் வெட்டுக் காயங்களுடன் புதை குழியிலிருந்து பேத்தாலை தாமரைக்கேணியில் கண்டெடுக்கப்பட்டது.

எனினும் இதுவரை எமது முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் எவ்விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. எனவே, எம் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதில் சில பொலிஸ் அதிகாரிகளும் செயற்படுவதாகவே நாம் சந்தேகிக்கின்றோம்.

நாடளாவிய ரீதியில் எமது அலுவலகங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பது வழமையாகும். அதே போல் செங்கலடி அலுவலகத்திற்கும் பொலிஸாரும், படையினரும் காவல் கடமையில் இருந்துவரும் நிலையில், எமது உறுப்பினர்களின் செயற்பாடுகள் அத்தனையும் அவர்கள் அறிந்ததாகவே இருந்துள்ளது. இந்நிலையில் எமது உறுப்பினர்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தால் அதை பொலிஸார் அனுமதித்திருக்கவும் மாட்டார்கள். அப்படி ஒரு சம்பவம் குறித்து தமது மேலிடத்துக்கும் அறிவித்திருப்பர். ஆனால், அப்படியெதுவும் நடக்கவில்லை. இதிலிருந்தே எமது கட்சி மீதான குற்றச்சாட்டுகளுக்கு பின்னணியில் தீய நோக்கம் உண்டு என புலனாகின்றது- என்றுள்ளது.

## ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவேண்டும்

அச்சுவேலி ஜூலை 24

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்கென கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஆசிரியர் நியமனம் பெற்று மூன்று மாதகால சேவை உள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விப் பிரிவுக்கும் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

22 பாடத்துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அடுத்த வருடத்தில் இருந்து ஆசிரிய கலாசாலைகளின் கல்வியாண்டு ஜனவரியில் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த காலங்களில் ஜூலை மாதம் தொடக்கம் அடுத்த ஜூன் மாதம் வரை கல்வியாண்டு இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. (203-11)

## இலங்கை வங்கிக் கிளையில் கணக்கு வைத்துள்ள சாதாரணதரம், புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஜூலை24

இலங்கை வங்கிக் கிளைகளில் கணக்கு வைத்திருக்கும் சிறார்களில் 2007ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சி.ஈ.சாதாரணதரப் பரீட்சை ஆகியவற்றில் சித்திபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

சாதாரண தரத்தில் சித்திபெற்றவர்களில் 3 பேருக்கும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களில் 6 பேருக்கும் இந்தப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

சாதாரணதரத்தில் சித்தி பெற்றுப் பரிசில்கள் பெறுவோர்:

குணநாதன் நிருஷன்- யாழ்.இந்துக் கல்லூரி, நரேந்திரன் திருத்தணிகன்- யாழ். இந்துக் கல்லூரி, ருக்ஷிகா சந்திரபோஸ் வேம்படி மகளிர் கல்லூரி.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றுப் பரிசில்கள் பெறுவோர்:

வானதி சபாநாயகம் -காங்கேசன் துறைக் கிளை, மணிவண்ணன் மதுஷன்- யாழ்.மேற்தரக்கிளை, பத்மநாதன் மேஷிகன்- யாழ். மேற்தரக்கிளை, சங்கவி சுதானந்தராஜா- யாழ்.மேற்தரக்கிளை, கனகலிங்கம் சங்கீத்- அச்சுவேலி, துஷிதா மனோகரன்- நெல்லியடி.

வங்கியில் பணியில் இருந்தபோது காலமான வங்கியின் நெல்லியடிக்கிளை உத்தியோகத்தருக்கான காப்புறுதியும் இந் நிகழ்வில் வைத்து வழங்கப்படும். (203)

## சிறுவர் அரங்கப் போட்டியில் பாலசுப்பிரமணியம் வித்தி. முதலிடம்

ஆனைக்கோட்டை குடும்ப பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட சிறுவர் அரங்க போட்டியில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை குடும்ப மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (202-100)

## உரமானியப்படிவங்களை பெறுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 24

வரணி வடக்கு விவசாயிகள் சம்மேளனம் உரமானிய படிவங்களை விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றது.

எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் உரியவர்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## கவிஞர் செல்லையாவின் நூற்றாண்டு விழாவும் பரிசில் வழங்கலும்

கரவெட்டி, ஜூலை 24

அல்வாயூர் கவிஞர் மு.செல்லையாவின் ஜனன நூற்றாண்டு விழாவும் அவரது ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பிரிசில் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அல்வாய் சாமணந்தறையில் அல்வாயூர் கவிஞர் செல்லையா அரங்கில் இடம்பெறவுள்ளன.

ஓய்வுபெற்ற அதிபர் செ.சதானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் செ.சிவலிங்கராஜா கலந்து கொள்வார். (203–70)

## முன்பள்ளிக் கண்காட்சி அறிவுறுத்தல் கூட்டம்

மந்திகை, ஜூலை 24

வடமராட்சி வலய முன்பள்ளிக் கண்காட்சி கலைநிகழ்வு தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்த அறிவுறுத்தல் கூட்டத்திற்கு வடமராட்சி வலயத்திற்குட்பட்ட அனைத்து முன்பள்ளிகளின் ஆசிரியர்களும் தவறாது பங்கு கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (203-218)

## அறநெறிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகமும் வடமராட்சி வலயக்கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்தும் அறநெறிக்கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா சிறப்புரை நிகழ்த்துவார். (203-70)

## ஆத்மாவின் வடிவங்கள் நீங்கள்

நீங்கள் அனைவரும் அன்பின் வடிவங்கள். ஆனந்தத்தைப் பெறுங்கள். நீங்கள் ஆத்மாவின் வடிவங்கள். இந்த உணர்வை வலுப்படுத்திக் கொள்ளுங்கள்.

'நான் மனிதனல்ல. நான் கடவுள்' என்பதைக் கூறிக்கொள்ளுங்கள். மனிதன் என்பது என் உடலைக் குறிக்கின்றது. என்னையல்ல.

மலம் நிறைந்த உடல். நோயால் வருந்துவது. எலும்புகள் நிறைந்த உடல், சதைப் பிண்டம். இது நிரந்தரமென்று நினையாதே.

இவ்வுடல் உடை போன்றது. விழிப்புணர்வே (சைதன்யமே) உண்மையான வடிவம். நீங்கள் அழியக்கூடியவர் அல்லர். நீங்கள் என்றுமுள்ள ஆத்மா.

இந்த ஆத்ம தத்துவத்தைப் பற்றிக்கொண்டு, உடலை ஒரு கருவியாகக் கருதுங்கள். உடல், மனம், புத்தி, புலன்கள் அனைத்தும் கருவிகளே. இவையனைத்தும் எதிர்மறைத் தன்மை உள்ளவை. இதற்குப் பின்னணியில் முன்னேறும் ஆற்றல் உள்ளது. இதுவே எதிர் மறைத் தன்மையை சீர் செய்கிறது.

முன்னேறும் எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் வாழ்க்கை நிறைவுபெற இயலும்.

மனம் நிலையற்ற தற்காலிக சுகங்களை நாடிச்செல்ல அனுமதி தரலாகாது. அப்போது அனைவரும் அமைதி பெறுவீர்கள். அமைதி பெற்று, உலகத்துடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போது நம் வாழ்க்கையில் முக்திப்பேறு கிடைக்கும். உலகம் மகிழ்ச்சியுடன் இருக்கும்.



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானபீட மாணவருக்குப் பாதிப்புத் தொடராதிருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு

## உதயன் செய்தி குறித்துப் பீடாதிபதி

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு ஜி.சீ.ஈ.(உயர்தர) 2006, 2007 பரீட்சைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு தொகுதி மாணவர்கள் முதலாம் வருட கற்றல் செயற்பாடுகளையும் பரீட்சைகளையும் பூர்த்தி செய்துவிட்டனர்.

இவ்வாறு விஞ்ஞான பீடாதிபதி தெரிவித்தார்.

"விஞ்ஞானபீட மாணவருக்கு மீள்தேர்வுகள் ஆரம்பம்" என்ற தலைப்பில் 21.07.2008ஆம் திகதிய உதயனில் வெளியான செய்தி குறித்து பிரஸ்தாபித்தபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது கற்றல் செயற்பாடுகளின் மத்தியில் உள்ள மாணவர்கள் பற்றிய உண்மை நிலை என்னவெனில் 2006 ஓகஸ்ட் மாதத்தின் முன் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் 2006 ஓகஸ்ட் முதல் 2007 மார்ச் வரை நாட்டு நிலை காரணமாகத் தடைப்பட்டிருந்ததால் எட்டு மாதங்கள் வரை பின்தள்ளப்பட்டுள்ளது. இது தவிர்க்க முடியாதது.

இப்பாதிப்புத் தொடராதிருக்க ஜி.சீ.ஈ. 2006, 2007 பரீட்சைகளின் அடிப்படையில் விஞ்ஞானபீடத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட இரு தொகுதி மாணவர்களது கல்விச் செயற்பாடுகளும் ஒரே சமயத்தில் ஆரம்பிக்கப்பட்டு இம்மாணவர்கள் தமது முதலாம் வருட கற்றல் செயற்பாடுகளையும் பரீட்சைகளையும் பூர்த்திசெய்துவிட்டனர். அவர்களது இரண்டாம் ஆண்டு கற்றல் செயற்பாடுகள் இன்னும் இரு வார காலத்தில் ஆரம்பமாகவுள்ளது. இது யாழ்.பல்கலைக்கழக ஏனைய பீடங்களின் கற்றல் செயற்பாடுகளுடன் ஒப்பிடும்போது விஞ்ஞான பீடம் முன்னணியில் நிற்பதைத் தெளிவாகக் காட்டும்.

பல இடையூறுகள், வசதிக்குறைவுகளுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றும் ஆசிரியர்களை மனம்நோக வைக்கும்செயலாகும். ஏனைய பீடங்கள் பரீட்சைகளை ஒத்திவைத்த சமயத்தில் கூட பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்திய விஞ்ஞானபீடத்தின் மீது 'பரீட்சைகள் உரிய காலத்தில் இடம் பெறுவதில்லை' என ஒரு சாரார் குற்றம் சுமத்துவது வேதனை தருகிறது -என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)



*லங்கா சிமெந்து நிறுவனத் தலைவர் எஸ்.ஜே.பரணகம, காங்கேசன்துறையிலுள்ள சிமெந்துத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு யாழ்.விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அதன் பின்னர் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொள்வதற்காக மருதனார்மடத்திலுள்ள யாழ். மாவட்ட லங்கா சிமெந்து நிறுவனத்துக்கு வருகை தந்தபோது எடுக்கப்பட்ட படம். படத்தில் அவருடன் யாழ். மாவட்ட அலுவலகப் பொறுப்பதிகாரி த.ஸ்ரீராம், ஒருங்கிணைப்பு அதிகாரி பொ. விமலநாதன் ஆகியோரும் ஏனைய உத்தியோகத்தர்களும் காணப்படுகின்றனர்.*

## மரண அறிவித்தல்

### ஞானேந்திரன் பார்த்தீபன்



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேந்திரன் பார்த்தீபன் 22.07.2008 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ஞானேந்திரன் - லீலாவதி தம்பதியரின் அன்பு மகனும் கஜீபன் (லண்டன்), சுமதி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2008) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கற்பக வில்லா",
மீசாலை வடக்கு,
வேம்பிராய். (76595)

தகவல்:
குடும்பத்தினர்.

## யுவதி காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

செம்மணி சோதனைச் சாவடியில் சோதனை முடிந்த பின்னர் ஓடி வந்து பஸ்ஸில்ஏறிய யுவதி தவறி வீழ்ந்து காயமடைந்தார். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த க.கவிப்பிரியா (வயது 24) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (202-207)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
06 ★ 10 ★ 1943



மறைவு
24 ★ 06 ★ 2008

### திருமதி பாலகிருஷ்ணபிள்ளை சறோஜினிதேவி

402, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (76593)

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1004 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மீனம் 04 25 32 40

22-07-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 4946183 - 4962653

ஜக்பொட் பரிசு ரூபா.4,143,450/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 364,041 | 10/- | 3,640,410/- |
| 2 இலக்கங்கள் | 33,504 | 20/- | 670,080/- |
| 1 இல. + லக்கினம் | 33,017 | 30/- | 990,510/- |
| 2 இல. + லக்கினம் | 2,999 | 100/- | 299,900/- |
| 3 இலக்கங்கள் | 901 | 500/- | 450,500/- |
| 3 இல. + லக்கினம் | 73 | 5,000/- | 365,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,143,450/- | - |
| மொத்தம் | | | 6,816,400/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 434,544 | | 7,316,400/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,956,450/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மொனராகலை | 4950113-5-61 |
| பதுளை | 4949417-1-72 |
| கேகாலை | 4947966-5-73 |
| நுவரெலியா | 4954038-4-06 |
| இரத்தினபுரி | 4950301-3-12 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02

## உள்ளூராட்சி வாரத்தையொட்டி நயினாதீவில் வெள்ளடை வீதி திங்களன்று திறக்கப்படுகின்றது

யாழ்ப்பாணம்,ஜூலை 24

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நயினாதீவில் வெள்ளடை கிரவல் வீதி திறந்துவைக்கப்படவுள்ளது.

வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தலைமையில் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு திறப்புவிழா இடம் பெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்துகொண்டு புதிய வீதியைத் திறந்துவைக்கவுள்ளார். (202-95)

## சிக்கன மின்குமிழ்

60%-80% வரையான மின்சார சிக்கனத்தை ஏற்படுத்தும் உத்தரவாதத்துடன் கூடிய மின்குமிழ்களை (Energy Saving Bulbs) எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**Digital Electronics**
205/7, Raja Theatre Complex,
Kasthuriar Road, Jaffna.

## வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் (Town, Campus இற்கு அண்மையாக) குருந்தடிப் பிள்ளையார் கோயிலடியில் கௌரவமான சுற்றாடலில் சுற்றுமதில் மேல் மாடியுடனான நான்கு அறை கொண்ட புதிய வீடும் வீட்டுத் தளபாடங்களும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: பொ.அருளானந்தன்
071- 5643967, 071 - 5234379

## தவறிவிட்டது

முதலாம் வட்டாரம், வேலணை கிழக்கு என்னும் முகவரியுடைய இராசையா யோகரத்தினம் என்பவரின் தேசிய அடையாள அட்டை மற்றும் நேவி அடையாள அட்டை என்பன 17.07.2008 அன்று நல்லூருக்கும் வேலணைக்குமிடையில் [illegible] வரியில் ஒப்படைக்கவும்.

[illegible]
வங்களாவடி லேன், வேலணை. (சி/553867)

## அச்சகத்துறையில் பதவி வெற்றிடங்கள்

- ★ ஒப்புநோக்குநர் (ஆங்கில அறிவு அவசியம்)
- ★ கணனி இயக்குநர் (முன் அனுபவத்தினருக்கு முன்னுரிமை)
- ★ புத்தகம் கட்டுநர் (முன் அனுபவம் விரும்பத்தக்கது)

இத்துறைகளில் தகைமை உடையோர் 26, 27/07/2008ஆம் திகதி (சனி, ஞாயிறு) களில் காலை 9-4 மணிவரை நேரில் வரவும்.

**சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்**
பலாலி வீதி, கோண்டாவில்.
(76596)

## கண்ணீர் அஞ்சலி



எமது உயர் கணக்கியல் கல்லூரியின்
பொருளியல் ஆசிரியர் திரு.P.மோகன்
அவர்களது பாசமிகு தாய்

### திருமதி பூதப்பிள்ளை பரமேஸ்வரி

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும்
எமது ஆசிரியருக்கும் குடும்பத்தினருக்கும் எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
உயர் கணக்கியல் கல்லூரி, சித்தன்கேணி.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### பராமரிப்புப் பகுதி வேலைகளுக்கான திறன் சாராத் தொழிலாளர் (Unskilled) வழங்கல் சேவைக்கான விலைமனுக் கோரல்

மேற்படி சேவையை வழங்குவதற்கு பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மீளளிக்கப்படும் பிணைப்பணமாக ரூபா 10000/= மற்றும் மீளளிக்கப்படாத பிணைப்பணமாக ரூபா 250/= என்பவற்றைப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் கட்டிய பற்றுச்சீட்டை உதவிப்பதிவாளர், நிர்வாகம் அவர்களிடம் ஒப்படைத்து கூறுவிலைப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட மனுக்களை கடித உறையில் இட்டு அரக்கிடல்வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் *"திறன் சாரா தொழிலாளர் வழங்குவதற்கான விலை மனு"* என குறிப்பிட்டு ***பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி*** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது பதிவாளர் அலுவலகத்திலுள்ள விலை மனுப்பெட்டியில் நேரடியாக 08.08.2008 பி.ப. 2.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படவேண்டும். மனுக்கள் அன்றைய தினம் பி.ப.2.30 மணிக்கு பரிசீலிக்கப்படும்போது மனுதாரர்கள் சமூகம் தரலாம். பல்கலைக்கழகக் கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

(சி/553866)

**பதில் பதிவாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாந்தனின் எழுத்துலகம் தொடர்பான விமர்சனத் தொகுப்பு அறிமுக நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகப் புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், நூலின் தொகுப்பாசிரியர் க.ஸ்ரீகணேசன், கவிஞர் சோ.பத்மநாதன், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் ஆயர் அதி.வண.ஜெபநேசன் ஆகியோர் உரையாற்றுவதை முதல் நான்கு படங்களிலும் காணலாம்.
நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை ஐந்தாவது படத்தில் காணலாம்.
*(படங்கள்: லக்ஷ்மன்)*

## போஷணைக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை24

உள்ளூரில் கிடைக்கும் உற்பத்திப் பொருள்களைக் கொண்டு போஷாக்கான உணவுப் பொருள்களைத் தயாரிப்பது குறித்து விழிப்புணர்வுக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சி இன்று வியாழக்கிழமை கொக்குவில் மேற்கு, குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

கொக்குவில் பகுதி சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களால் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (202)

## முருகவேள் வித்தியாசாலைக்கு மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை24

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் மின்சுற்று வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என்று பாடசாலை அதிபர் து.கிருபாகரன் கவலை தெரிவித்துள்ளார்.

எழுவைதீவைச் சேர்ந்த நலன்விரும்பி ஒருவரின் நிதி உதவியுடன் மின்சுற்று வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் பலன் எதுவும் கிட்டவில்லை என்று தெரிவித்துள்ளார்.

எனவே இதற்கான நடவடிக்கைக்ளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர் உரிய அதிகாரிகளைக் கேட்டுள்ளார். (203-325)

## அராலியில் ஆயுள்வேத நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை24

வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் நிகழ்வில் இன்று வியாழக்கிழமை அராலி கலைமகள் சனசமூக நிலையத்தில் ஆயுள்வேத நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

அத்துடன் சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது. (203)

## தவசிகுளம் குடியிருப்பு வீடொன்றில் தீ பரவியதில் உடைமைகள் சேதம்

தவசிகுளம் பகுதியில் குடியிருப்பு வீடொன்று திடீரென தீப்பிடித்து எரிந்தது.

இச்சம்பவத்தால் அந்த வீட்டிலிருந்த பெறுமதியான உடைமைகள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகின.

தவசிகுளம் - மிருசுவில் பகுதியிலுள்ள நல்லதம்பி சிவதீபன் என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தின்போது கணவர் வீட்டில் இல்லாத நிலையில் மனைவி தீயை அணைக்கப் பல முயற்சிகள் எடுத்தபோதிலும் தீயை அணைக்கமுடியவில்லை என்று கூறப்பட்டது.

இச்சம்பவத்தில் வீட்டில் இருந்த குறிப்பிட்ட ஒரு தொகைப் பணம், ரி.வி., றேடியோ, உடுபுடைவைகள் உட்பட அனைத்துப் பொருள்களும் எரிந்து நாசமாகின.

இது தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (203-131)

## புறொயிலர் கோழியின் விலையில் வீழ்ச்சி

குருநகர்,ஜூலை24

யாழ்ப்பாணத்தில் புறொயிலர் கோழியின் விலையில் மாற்றமேற்பட்டுள்ளது.

ஒரு கிலோ கோழி 680 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது 550 தொடக்கம் 580 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (203-51)

# இடைநிறுத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறியை செப்ரெம்பர் மாதம் வடக்கு, கிழக்கில் ஆரம்பிக்க நடவடிக்கை

அச்சுவேலி,ஜூலை24

கடந்த மாதம் இடைநிறுத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் மீண்டும் வடக்கு, கிழக்கில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு வவுனியா கல்வியியல் கல்லூரியிலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை ஆகிய ஆசிரிய கலாசாலைகளிலும் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மகரகம, களுத்துறை, பஸ்துன்ரட்ட ஆகிய இடங்களில் ஆங்கில ஆசிரியர் பயிற்சி பெற்றுவந்த ஆசிரியர்களின் பயிற்சி செயற்பாடுகள் கடந்த மாதம் 20ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்டு அவர்கள் கடமைபுரிந்த பாடசாலைகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

பயிற்சி இடைநிறுத்தப்பட்டதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் பல்வேறுவிதமான பாதிப்புகளுக்கும் நெருக்கடிக்கும் ஆளாகவேண்டியிருந்தது.

இதனைக் கருத்திற்கொண்டு இவர்களுக்கான பயிற்சிநெறிகளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஓகஸ்ட் பாடசாலை விடுமுறையை அடுத்து செப்ரெம்பர் மாதத்தில் பயிற்சியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மகரகம, களுத்துறை, பஸ்துன்ரட்ட ஆகிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சிபெற்ற 150இற்கு மேற்பட்ட ஆங்கிலப் பயிற்சி ஆசிரியர்களில் 90 வீதத்தி னர் தமிழர்கள். பாதுகாப்புக் காரணத்தை முன்வைத்தே பயிற்சிகள் இடைநிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருப்பதால் குறிப்பிட்ட ஆசிரியர்களை மீண்டும் மகரகம, களுத்துறைக்கு அழைப்பதில் சிரமம் ஏற்படுவதாகக் கூறப் பட்டது.

இதனைக் கருத்திற்கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வைத்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது. (203-11)

# வடக்கு மாகாணப் பாடசாலைகளின் தேவைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை

அச்சுவேலி,ஜூலை24

வடக்கு மாகாண பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களைப் பாடசாலைகளின் தேவை கருதி இணைத்துக்கொள்ளும் திட்டத்தின்கீழ் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

தற்பொழுது நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் ஒன்று சேர்க்கப்பட்டு நிரல்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவர்களுக்கான நியமனங்கள் மூன்றாம் தவணை ஆரம்பத்தில் வழங்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

பட்டதாரிகளை ஆசிரியர்களாக இணைத்துக்கொள்வதற்கு நடத்தப்பட்ட பரீட்சையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட ஆயிரத்து 250 பேர் வரையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

நேர்முகப் பரீட்சைக்கு ஆயிரத்து 600 பேரை அழைக்க ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் ஆயிரத்து 250 பேர் மட்டுமே சித்தி பெற்றிருந்தனர்.

சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்த பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு, ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது. (203-11)




# நிவாரண உதவிகள் ஏதும் இன்றி அவலப்படும் கெற்பேலி மக்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை24

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமமான கெற்பேலி கிராம மக்கள் நிவாரண உதவிகள் எதுவும் இன்றிப் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பல வகையாலும் பாதிக்கப்பட்டுள்ள இக்கிராம நிலைமையை, இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களின் நலனை உயர் அதிகாரிகள் எவரும் கவனத்தில் எடுப்பதில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்திற்கு நிரந்தர கிராம சேவை அலுவலர் எவரும் நியமிக்கப்படவில்லையெனவும் தற்காலிகமாக விடத்தற்பளை கிராமசேவை அலுவலர் பணி புரிந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் இந்தப் பகுதியில் வசிக்கும் வறிய குடும்பங்களான 24 குடும்பங்கள் சமுர்த்தி முத்திரையோ அல்லது நிவாரண உதவிகள் எதுவும் இல்லாமல் பெரும் அவலமடைந்து வருகின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருக்கும் இக்கிராமம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எவ்வித பயனும் கிடைக்கவில்லையென பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-131)

# மாகாண மட்டத் தமிழ்த்தினப் போட்டிக்கு 'பாஞ்சாலி சபதம்' தென்மோடி நாட்டுக்கூத்து

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.கல்வி வலய மட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம் பெற்ற 'பாஞ்சாலி சபதம்' தென்மோடி நாட்டுக்கூத்து மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்களின் நடிப்பிலான இந்த நாட்டுக்கூத்து கோட்டம், வலயம், மாவட்டம் ஆகிய மட்டங்களில் வெற்றி பெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவாகியிருக்கின்றது.

மாகாண மட்டத்தில் வெற்றியாளர்களைத் தெரிவுசெய்வதற்கு ஒலி, ஒளிப் பிரதிகளே எடுக்கப்பட்டமையால் அவை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-302)

# கொழும்புத்துறையில் பாடல் போட்டி; விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜூலை24

கொழும்புத்துறை புனித றொசாறியன் சனசமூக நிலையத்தினரால் தனிப்பாடல் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

உள்ளூராட்சி வாரத்தைச் சிறப்பிக்கும் வகையில் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பங்குபற்ற விரும்பும் எவரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் [illegible]ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சனசமூக நிர்வாகத்திடம் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வயதுக் கட்டுப்பாடு இன்றி ஆண், பெண் இருபாலாரும் இதில் பங்குபற்ற முடியும்.

போட்டியாளர் வாத்தியக் கருவிகள் எதனையும் பயன்படுத்தாது எந்தவகையான பாடல்களையும் பாடமுடியும்.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்குப் பரிசில்களும் போட்டியில் பங்குபற்றுவோருக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (203-302)

## வெளி மாவட்ட ஆசிரியர்களுக்கு தற்காலிக இணைப்பு

நல்லூர்,ஜூலை24

ஆசிரியர் பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறும் கிளிநொச்சி, துணுக்காய், மல்லாவி, முல்லைத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இங்குள்ள பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தகவலை யாழ்.மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.ரி. செல்வரத்தினம் தெரிவித்தார். (202-111)

## இந்து மகளிர் கல்லூரியில் கலை விருந்து இசை நடனம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கலை விருந்து எனும் இசை நடன நிகழ்வை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இந்த நிகழ்வு கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் பாடசாலை மாணவர்களுக்காக காலை 9 மணிக்கும் பொது மக்களுக்காகப் பிற்பகல் 2 மணிக்கும் நடைபெறவுள்ளது. (203)

## மட்டுவில் கத்தரிக்காய் சந்தைக்கு வந்தது

யாழ்ப்பாணம்,ஜூலை24

மட்டுவில் கத்தரிக்காய் தற்பொழுது சந்தையில் தாராளமாக விற்பனைக்கு வந்துள்ளது.

ஒரு கிலோ கத்தரிக்காய் பத்து ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

இந்த வருட ஆரம்பத்தில் பெருமழை பெய்தமையால் ஏற்கனவே பயிரிடப்பட்ட கத்தரிக் கன்றுகள் அழுகியதில் விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மட்டுவில் கத்தரி மட்டுவில் பகுதியில் உள்ள வயல்வெளிகளான முதலியார் வயல்வெளி, சிலுவில் வயல்வெளி, அம்பலந்துறை வயல்வெளி, பன்றித்தலைச்சி அம்மன் வயல்வெளிகளில் கூடுதலாகப் பயிரிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே பயிரிடப்பட்ட கத்தரிக் கன்றுகள் அழுகியமையால் விவசாயிகளால் மீளப் பயிரிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னோலையைப் பிளந்து உயரம் பாய்தல் கம்பாக பயன்படுத்தி வெற்றி கண்டவர் எழுவைதீவு மாணவர்கள்

**வளங்கள் குறைந்த போதிலும் சாதனை படைப்பவர்கள் என அதிபர் பெருமிதம்**

கரம்பன், ஜூலை24

மேலும் பயிற்சிகளுக்கு ஏற்ற உபகரணங்கள் இல்லாதபோதும் கிடைக்கின்ற வளங்களைக் கொண்டு தீவிரபயிற்சி பெற்றுச் சாதனை படைக்கிறார்கள் எழுவைதீவு மாணவர்கள்.

இதற்கு சான்றாக தென்னோலையைப் பிளந்து அதனை உயரம்பாய்தல் கம்பமாகப் பயன்படுத்தி அசையாத நம்பிக்கையும், இடைவிடாத பயிற்சியும் பெற்று கோட்டம், வலய மட்டப் போட்டிகளில் இடங்களைப் பெற்றனர். மாவட்ட மட்டத்தில் பங்குபற்றி தீவக வலயம் சார்பாக இடங்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் அதிபர் து.கிருபாகரன் பெருமையுடன் தெரிவித்தார்.

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு விழாவும் அண்மையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றன.

அங்கு அதிபர் கிருபாகரன் தலைமையுரை நிகழ்த்தும்போது மேலும் தெரிவித்ததாவது:

பயிற்சிகளுக்கு ஏற்ற உபகரணங்கள், வளங்கள் இல்லாத போதும் விளையாட்டிலும் கல்வியிலும் சாதனை படைக்கக் கூடியவர்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளில்நடைபெற்ற கோட்ட, வலய, மாவட்ட மட்ட மெய்வன்மை நிகழ்வுகளில் பங்குபற்றி சாதனைகளை எமது மாணவர்கள் நிலைநாட்டியுள்ளனர்.

கடந்த 35 ஆண்டுகளுக்கு முன் இப் பாடசாலையில் கல்வி கற்று ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சையில் சித்திபெற்றவர் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலய ஆசிரியை திருமதி ஞானசோதியன் சரோஜினிதேவி. அதன் பின்னர் எமது வித்தியாலயத்தில் கல்வி கற்று கணித விஞ்ஞான பாடங் கள் உட்பட 9 பாடங்களில் சித்தி பெற்ற மாணவன் உருத்திரகுமாரன் சஞ்சீபராஜா. இம்மாணவன் எமது ஆசிரியர்களால் மட்டும் நெறிப்படுத்தப் பட்டு சிறந்த பெறுபேற்றைப் பெற்று பாடசாலைக்கும் ஆசிரியர்களுக்கும் எழுவைதீவு மண்ணுக்கும் பெருமை தேடித் தந்தனர்- என மேலும் குறிப்பிட்டார்.

(202-325)

பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே! G.S.லிங்கநாதன் அன்கோ ஸ்தாபனம்

நேரடியாகத் தருவிக்கப்பட்ட புத்தம் புதிய சாறிவகைகள்,
திருமணப் பட்டுப் புடைவைகள் (வித்தியாசமான தெரிவுகள்)
விற்பனைக்கு வந்துவிட்டன என்பதனை
எமது வாடிக்கையாளர்களுக்குப் பெரு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

தெரிவுக்கு முந்துங்கள்

உங்கள் மகிழ்ச்சியே எங்கள் திருப்தி

* நவீனரக புதிய புடைவைத் தெரிவுகள்,
* றெடிமேட் ஆடைவகைகள்,

பான்சி ரகங்கள், வெடிங் கிவ்றஸ், சூட்கேஸ் வகைகள், பேபி நீட்ஸ், றெஜிபோம் எழுத்துக்களும், வாழ்த்துகளும்,
பூ மாலைகள் அனைத்துப் பான்சி ரகங்களும் பெற்றுக்கொள்ள G.S.லிங்கநாதனின் 3 ஆம் மாடி
சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்தையும் ஒரே இடத்தில்
தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

* சிறுவர் சிறுமிகளுக்கு அன்பளிப்புப் பொருள்கள் இனாமாக வழங்கப்படுகிறது.

புதிய சாறிகள் சில்வர் ரச், அஸ்வினி, அநாரங்கி, வினே, பிரியங்கா, கிரசி, கோபி சாறி, ராஜ்குரு சாறி, உருத்திகபிரகாஸ், குருவி, குசேலன், கல்பனா சாறி, லக்ஸரி சாறிகள்.
அரவிந் மில் - மஸ்லின் றெடின் 1 மீற்றர் 225 /=
அரவிந் மில் - சிகோறி றெடின் 1 மீற்றர் 275 /=

G.S. லிங்கநாதன் அன்கோ
தலைமைஸ்தாபனம்: இல.13,14, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்: இல 47, பெரியகடைவீதி யாழ்ப்பாணம்.

## வதிரி பரமானந்தா ஆச்சிரமத்திலுள்ள சிறார்களுக்கு சேமிப்புக் கணக்குகள்

வடமராட்சி, ஜூலை 23

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையின் பொன்விழாவை முன்னிட்டு வெளிநாட்டில் வசிக்கும் பருத்தித்துறை வாசி ஒருவர் வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் உள்ள 31 சிறுவர்களின் பெயரில் சேமிப்புக் கணக்குகளைத் தொடங்கியுள்ளார்.

ஒவ்வொரு பிள்ளைகளின் பெயரிலும் தலா ஆயிரம் ரூபா வைப்பிலுள்ள சேமிப்புப் புத்தகங்களை வழங்கியுள்ளார்.

(202-236)

dishtv TATA Sky

புதிய இணைப்பிற்கும் கட்டணங்கள் செலுத்துவதற்கும்

SATS - TECH

(TRCSL அனுமதிபெற்ற நிறுவனம்)
Dial : 021 222 5908, 222 8812, 0777710785

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் அம்பலவாணர் குலசேகரம் J.P.

(இளைப்பாறிய நூலகர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)

தோற்றம்: 26.08.1937


மறைவு: 24.07.2000

என்றும் உங்கள் நினைவுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்.

கைதடி நுணாவில், சாவகச்சேரி.

(76372)

## எங்கள் தெய்வத் திருத்தந்தையின் ஏழாவது ஆண்டு நினைவுத்திருவஞ்சலி



உதயம்: 01.07.1938

அஸ்தமனம்: 11.08.2001

**அமரர் உயர்திரு. பொ.சங்கரப்பிள்ளை**

(முன்னாள் அதிபர், யா/ உடுத்துறை மகாவித்தியாலயம்)

திதி: அபரபக்க ஸப்தமி 24.07.2008

மானிட நேயத்திற்கு
இலக்கணமாய் வாழ்ந்த
எங்கள் நேசத் தந்தையே!
உங்கள் வற்றாத பாசமும்
உயிரான நேசிப்பும்
கூட்டுக்குயில்களாக–நாம்
கூடி மகிழ்ந்ததுவும்
நேற்றுப் போலவே – எம்
நெஞ்சில் நிறைந்திருக்க

எங்கள் விழிகள்
என்றும் பனித்திருக்க!
இன்றும் வாழ்கின்றோம்
என்றும் வாழ்வோம்...!
மாறாது உங்கள் நினைவு– எங்கள்
மகத்தான தந்தையே!
உன்னதங்களில் உன்னதமானவரே!
உங்கள் வாஞ்சைமிகு
அணைப்புக்கான எங்கள் ஏக்கங்கள்
என்றும் மௌனமாகவே!!

உடுத்துறை தெற்கு,
தாளையடி.

(76252)

அன்பு மனைவி, மகன்மார்,
மகள், மருமகன், மருமகள்மார்,
பேரக்குழந்தைகள், உறவினர்கள்.

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts upto 20.08.2008.

### Faculty of Medicine

Lecturer (on contract) in Anatomy/Biochemistry/Physiology
Demonstrator (on contract) in Anatomy/ Biochemistry/ Physiology/ Community Medicine/ Pathology/ Microbiology/ Parasitology /Forensic Medicine/ Pharmacology/ Medicine/ Psychiatry/ Obstetrics & Gynaecology/ Paediatrics/ Surgery/ Medical Education

### Para Medical Degree Programme

Demonstrator (on contract) in Nursing/Pharmacy/Medical Laboratory Technology

**Note:**

1. Applications are expected from candidates with **MBBS** Degree for the posts in the Faculty of Medicine.
2. Applications from candidates with **BDS** and **BVSc** degree shall be considered for the posts in **Anatomy, Biochemistry and Physiology.**
3. Applications from candidates with **BSc** in Biochemistry degree can also be considered for the posts in Biochemistry.
4. Applications from the candidates awaiting the degree results may also apply for the Post of Demonstrator (on contract).

**Salary scale**

Lecturer (on contract)
Ra.26,900/ -(fixed) p.m
Demonstrator (on contract)
Rs,20,755/ -(fixed) p.m.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application, forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in **favour of the Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size,

Those who wish to apply for **more than** one post should apply in **separate forms.**

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the-closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**ACTING REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA 22.07.2008**

(C/553858)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமூக மட்ட அமைப்புக்களின் உதவியுடன் மாணவர்களைக் கல்வியில் முன்னேற்றுகிறது கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்


பாடசாலை அதிபர்

சமூக மட்டத்தில் காணப்படும் சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்களின் உதவியும் வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பும் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்துக்குக் கிடைக்கின்றது.

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியா



லயம் கஸ்டப்பட்ட பெற்றோர்களின் பிள்ளைகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. இப்பாடசாலைச் சுற்றாடலில் உள்ள பணம் படைத்தவர்கள், செல்வாக்கு மிக்கவர்கள் தமது பிள்ளைகளை வேறு பிரபல பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றார்கள்.

குறிப்பாகக் கூறுவதானால் யாழ்.நகரப் பாடசாலைகள் வரை சென்று அந்த மாணவர்கள் கற்று வருகின்றார்கள். இதன் காரணமாக குறிப்பிட்ட சிலரின் பார்வை இப்பாடசாலை மீது இல்லாத நிலை காணப்படுகின்றது. ஆனாலும் சமூக அமைப்புகள் இந்தப் பாடசாலையினதும் மாணவர்களினதும் வளர்ச்சியில் அக்கறை கொண்டு இயங்கி வருகின்றமை இப்பாடசாலையை இன்று இல்லாவிட்டாலும் நாளை ஒரு நல்ல நிலைக்கு உயரும் என்பதில் எந்த வகையான சந்தேகமும் இல்லை.

இப் பாடசாலை 1930 ஆம் ஆண்டு சிவபூதராயர் ஆலயத்தில் ஓர் இரவுப் பாடசாலையாகவும் திண்ணைப் பாடசாலையாகவும் இயங்கத் தொடங்கியது. இதனை க.வடிவேற் சுவாமியார், வே.பரமசுவாமியார் ஆகியோர் இணைந்து ஆரம்பித்துள்ளார்கள்.

1935 ஆம் ஆண்டு மீண்டும் இப் பாடசாலை 15 மாணவர்களுடன் பகல் நேரப் பாடசாலையாக இயங்கத் தொடங்கியது. தரம் 1 இல் இருந்து சிரேஸ்ட பாடசாலை சான்றிதழ் (எஸ்.எஸ்.சி.) வகுப்புகளைக் கொண்டு இயங்கத் தொடங்கியது. இப்பாடசாலையின் முதல் அதிபராக சிவகுருநாதன் கடமையாற்றியுள்ளார்.

பின்னர் அரசின் கொள்கைக்கேற்ப இப்பாடசாலை கையேற்கப்பட்டதுடன் வகுப்புகளின் எண்ணிக்கையிலும் மாற்றம் ஏற்பட்டு தரம் 1 முதல் 5 வரை இயங்கத் தொடங்கியது. கால ஓட்டத்தில் சமூக மட்டத்தில் உள்ளவர்கள் எடுத்த முயற்சியைத் தொடர்ந்து 8 ஆம் தரம் வரை வகுப்புகள் விஸ்தரிக்கப்பட்டன.

இடப்பெயர்வைத் தொடர்ந்து இப்பகுதி மாணவர்களின் நன்மை கருதி அப்போதைய அதிபர் சண்முககுமார் எடுத்த முயற்சியால் 1996 ஆம் ஆண்டு மீண்டும் இப்பாடசாலையில் தரம் 11 வரை வகுப்புகள் இயங்கத் தொடங்கின.

பாடசாலையின் தற்போதைய அதிபராக சுப்பிரமணியம் இராமலிங்கம் செயல்படுகின்றார். இவரிடம் பாடசாலை சம்பந்தமாக கேட்டபோது அவர் கூறியதாவது:-

தற்போது பாடசாலையில் 200 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். 14 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு கடந்தாண்டு 10 பேர் பரீட்சைக்கு தோற்றிய போதிலும் யாரும் சித்தி அடையவில்லை. நூறு புள்ளிகளுக்கு மேல் இரண்டு பிள்ளைகளும் 75 புள்ளிகளுக்கு மேல் 5 பேரும் பெற்றுள்ளார்கள்.

இவ்வாண்டு 11 பேர் தரம் 5 பரீட்சைக்கு தோற்றவுள்ளார்கள். இவர்களில் இரண்டு மாணவர்களாவது சித்தி அடைவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் செயற்பாட்டில் ஆசிரியர் குழாம் ஒன்று செயற்பட்டு வருவதினால் காலை, மாலை நேரங்களில் பாடசாலை கற்பித்தலுக்கு மேலாக வகுப்புகள் இடம்பெறுகின்றன.

ஜி.சீ.ஈ சாதாரண தரத்தைப் பொறுத்தவரை கடந்த ஆண்டு 20 பிள்ளைகள் பரீட்சைக்கு தோற்றிய போதிலும் 05 பேர் சித்தி அடைந்து உயர்தர வகுப்பில் கல்வி கற்கத் தகுதி பெற்றுள்ளார்கள். மற்றும் 06 பேர் ஐந்து பாடங்களில் சித்தி அடைந்துள்ளார்கள்.

இந்த ஆண்டு 11பேர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள் - என்றார் அதிபர்.

பாடரீதியாக ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது. ஆரம்பப்பிரிவுக்கு ஆங்கில ஆசிரியர் இல்லை. இதே போன்று இரண்டு ஆசிரியர்களுக்கான வெற்றிடம் காணப்படுகின்றது. தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் 5 பேர் கடமையாற்றுகின்றார்கள்.

குடியியல், சித்திரம், நடனம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. சித்திரம், நடனம் போன்ற பாடங்களை கற்பதற்கு மாணவர்கள் ஆர்வமாக இருக்கின்ற போதிலும் ஆசிரியர்களின் பற்றாக்குறையால் மாணவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

அயல் பாடசாலைகளுக்கு அனுமதிபெற முடியாத பிள்ளைகளே இங்கு இணைந்து கொள்கின்றார்கள். பெற்றோர்களின் நிலையும் பொருளாதார ரீதியாகப் பின்னடைவான நிலையில் உள்ளது.

தமிழ்த்தினப் போட்டியில் கோட்ட மட்டத்தில் இடங்களைப் பெற்றாலும் வலய மட்டத்தில் இடங்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு குறைவாகவே காணப்படுகின்றது. ஆங்கிலதினப் போட்டியில் மாணவர்கள் கோட்டமட்டத்துடன் திரும்பும் நிலையே காணப்படுகின்றது.

## ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக விரும்பும் பாடங்களைக் கற்க முடியாத நிலை

சமயப் போட்டிகள் மற்றும் பொது அறிவுப் போட்டிகளிலும் கலந்துகொண்டு மாணவர்கள் இடங்களைப் பெற்று வருகின்றார்கள். விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா போன்றவைகள் இல்லை. விளையாட்டு மைதானம் இல்லாத போதிலும் நல்லூர் கல்விக் கோட்டத்தில் எத்தனையோ வசதிகள், வாய்ப்புகள் கொண்ட பாடசாலையுடன் மோதி 15 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணியினர் கோட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் புகழ் சேர்த்துள்ளார்கள்.

விளையாட்டுத்துறையில் ஒரு வளர்ச்சியை இப்பாடசாலை பெற்று வருகின்றமைக்கு இந்நிகழ்வும் ஒரு சான்றாகும். இதே போன்று பொது வேலைத் திட்டங்களிலும் அக்கறை காட்டப்படுகின்றது. குறிப்பாக

**பவித்திரன்**

போசாக்கு வாரக் கண்காட்சி நடைபெற்றுள்ளது.

பாடசாலை வகுப்பறைகளில் ஒரு பகுதி திறந்த மண்டபத்தில் தற்காலிக தடுப்புகளின் மறைவில் இடம்பெற்று வருகின்றன. அதிபரும் சரி ஆசிரியர்களும் சரி உள்ள வளத்தை முழுமையாக பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் கல்வியை வளர்க்க வேண்டும் என்பதில் இணைந்து செயற்படுகின்றார்கள்.

பாடசாலைக்கு முழுமையான விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லை. நூலகமாக வகுப்பறை ஒன்று பயன்படுத்தப்படுவதுடன் 600 இற்கும் மேற்பட்ட நூல்கள் அங்கு காணப்படுகின்றன. நூல்களும் தளபாட வசதிகளும் நூலகத்திற்குத் தேவையாக உள்ளன.

நவீன உலகில் கணனிக் கல்வியின் அவசியம் கருதி மாணவர்களுக்கு இவ்வாண்டு முதல் கணனிக் கற்கை நெறியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களுக்கு கூடிய பயனுடையதாக காணப்படுகின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தன்னாலான உதவிகளை செய்து வருகின்றது. பழைய மாணவர் சங்கம் இல்லை. அதனை அமைக்க வேண்டும் என்பதிலும் கவனம் எடுக்கப்பட்டு வருகின்றது. பாடசாலையின் 75 ஆம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டு மலரும் வெளியிடப்பட்டது.

அயலில் காணப்படும் கலைவாணி சனசமூக நிலையம், இளைஞர் சனசமூக நிலையம், கோண்டாவில் மத்தி சனசமூக நிலையம் மற்றும் மாதர் சங்கமும் பாடசாலைக்கு வேண்டிய உதவிகளை பல்வேறு வகைகளிலும் வழங்கி வருகின்றன.

லண்டன், கனடா ஆகிய நாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்கள் பாடசாலைக்கு கணனிகள், அலுமாரிகள் போன்றவற்றை வழங்கியுள்ளார்கள். இத்துடன் எல்லைப் புறத்திற்கு மதில் கட்ட வேண்டிய தேவையும் காணப்படுகின்றது. அதற்கான உதவியையும் வழங்கி வருகின்றார்கள்.

கல்வித் திணைக்களம் இயன்ற உதவிகளை தேவைக்கு ஏற்ப வழங்கி வருகின்றது. பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சி சம்பந்தமான சந்திப்புக்களும் நல்லமுறையில் இடம்பெற்று வருகின்றன. *

30.05.2008 பத்திரிகையில் 3ஆம் பக்கத்தில் கல்விப் புனல் பகுதியில் வெளியான கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை தொடர்பான ஆக்கத்தில் முன்னாள் அதிபர் கனகலிங்கம் எனத் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. முன்னாள் அதிபர் எஸ்.கே.விநாயகலிங்கம் என்பதே சரியானதாகும். அத்துடன் பாடசாலையின் முழுப்பெயர் கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை என்பதாகும். தவறுக்கு வருந்துகின்றோம்.




# ஓர் ஆய்வின் திருப்திகரமான முடிவுக்கு எடுகோள்களும் அனுமானமும் இன்றியமையாதவை

**தமிழரின் கல்விப் பாரம்பரியத்தில் ஆய்வும் அதற்குரிய பிரச்சினைகளை அடையாளம் காணலும்**

**பாகம் 4**

உலகின் மிக உயர்ந்த விஞ்ஞான கண்டுபிடிப்பக்கள் பல எடுகோள் அடிப்படையில் தொடங்கப்பட்டவையாகும். இதற்கு உதாரணமாக ஐயன்ஷ்ரெயின் கண்டுபிடிப்புக்களான ஒளிமின்விளைவு தூரதிலுள்ள நட்சத்திரங்களிலிருந்து வரும் ஒளி அதன் பாதையில் இருந்து விலகுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை ஒளி போட்டன் என்ற துணிக்கைகளின் கற்றை என்ற கருதுகோளில் இருந்து ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவையெனலாம்.

ஆய்வில் எடுகோள்களும் (Assumptions) பிரதானமானவை. ஆய்வொன்றில் எடுகோள்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகளாக கொள்ளப்படுகின்றன.

இவற்றை ஆய்வில் சரியானவையாவென பார்க்க அவற்றை சோதிப்பது கிடையாது. எடுகோள்கள் இல்லாமல் ஆய்வு செய்வது இயலாத விடயமாகவும் அமையலாம். உதாரணமாக மேற்கூறப்பட்ட விடயமான தூரதிலுள்ள நட்சத்திரங்களிலிருந்து வரும் ஒளி அதன் பாதையில் இருந்து விலகுதலை காண்பதற்கான ஆய்வில் விலகலை அவதானிக்கச் சென்ற வானசாஸ்திரிகள் அவதானிக்கக்கூடிய ஆற்றல் உடையவர்கள் என்பதையும், அவர்கள் எடுத்துச் சென்ற கருவிகள் பாதையின் சிறிய விலகலைக்கூட கண்டுபிடிக்கக்கூடிய உணர்திறன் உடையவை என்பதையும் எடுகோள்களாக நாம் எடுக்கின்றோம் இவற்றின் ஏற்றுக் கொள்ளக் கூடிய தன்மையை நாம் சோதனைக்கு உட்படுத்துவதில்லை.

ஆனால் எடுகோள்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக இருக்க வேண்டும் இல்லையேல் ஏற்றுக்கொள்ளக் கூடிய பெறுபேற்றை ஆய்வாளனால் அடைய முடியாது. ஆகவே ஆய்வின் தரத்தை நிர்ணயிப்பதற்கு ஆய்வுகோளின் எடுகோள்கள் பற்றிய திருத்தமான முன்வைப்பு ஆய்வுக்கு இன்றியமையாததாகும்.

### ஆய்வுக்குரிய அனுமானம்

அனுமானம் என்பது ஆய்வாளரின் மனதில் தோன்றும் ஊகத்தின் அடிப்படையில் தோன்றும் ஆய்வாளரின் சுயமான தீர்மானம் அல்லது முடிவைக் குறிக்கிறது. இதுவும் சில இடங்களில் ஆய்வை முன்னெடுத்துச் செல்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆகவேதான் அனுமானத்தின் அடிப்படையில் தோன்றும் சுயதீர்மானத்தை அல்லது முடிவை பொருத்தப்பாடற்றவை எனக் கருதி அவற்றை ஒதுக்கிவிட்டு ஆய்வைத் தொடர முடியாது. அவ்வாறு மேற்கொள்ளும் ஆய்வு முழுமை பெறாமல் போவதுடன் பிரச்சனைக்குத் தீர்வு காணவும் முடியாது. ஏனெனில் ஒரு பிரச்சனை பற்றி ஆராய முற்படும் ஆய்வாளருக்கு அப்பிரச்சனை தொடர்பான முழுமையான தகவல்கள் அல்லது நம்பகரமான சான்றாதாரங்கள் கிடைக்காது இருக்கும் போது ஆய்வாளருக்குள்ள ஆய்வு அனுபவம், ஆய்வுப்புலமை, பரந்துபட்ட அறிவு போன்ற காரணங்களால் குறிப்பிட்ட பிரச்சனை தொடர்பாக பொருத்தமான அனுமானங்கள் அல்லது ஊகங்கள் தோன்றலாம்.

அவை பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு உதவலாம். குறிப்பாக நிலக்கணிதவியல் தொடர்பான பிரச்சினைகள் அல்லது புதிய கண்டுபிடிப்புக்களை அடையாளம் கண்டு அதற்குத் தீர்வு காண்பதில் அனுமானம் முக்கிய பங்கு வகித்து வருவதைக் காணலாம். இதனால் தர்க்க ரீதியான அனுமானங்கள் ஆய்வை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகிறது.

**ஆய்வுத் தகவல்களும் திறனாய்வும**

ஓர் ஆய்வை முன்னெடுத்துச் செல்வதில் ஆய்வு தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கு கணிசமான பங்குண்டு. அவை ஆய்வில் பெறும் முக்கியத்துவம் அத்தகவல்களுக்கு ஆய்வாளர் கொடுக்கும் பொருள் விளக்கம் அல்லது திறனாய்விலே தங்கியுள்ளது. ஒன்றுதிரப்பட்ட ஆய்வுத் தகவல்களுக்கு ஆய்வாளர் பொருள் விளக்கம் கொடுப்பது அவசியமாக இருப்பினும் அவற்றைச் செய்வதற்கு ஆய்வு நெறிமுறையில் ஒரு வரையறையோ கட்டுப்பாடோ இல்லை. இதனால் ஆய்வாளர்களின் அணுகுமுறை, ஆய்வுத் திறனுக்கு ஏற்ப அதன் பொருள் விளக்கம் அல்லது திறனாய்வு வேறுபட்டதாக இருக்கும்.

மேலும், பொருள் விளக்கம் அல்லது திறனாய்வு என்பதில் அதன் உண்மைத் தன்மையைவிட ஆய்வாளரின் அணுகுமுறை அல்லது சுயகருத்து முக்கிய பங்கு வகிக்கிறது. அவை ஆய்வில் பெறும் முக்கியத்துவம் ஆய்வாளரின் தர்க்கரீதியான பன்முகப்பார்வை, அணுகுமுறை, ஆய்வுத்திறன், ஆய்வுப் புலமை, முன்னைய முடிவில் இருந்து புதிய முடிவுகளையும், தீர்மானங்களையும் கண்டறிதல் என்பவற்றில்தான் அதன் முழுமைத் தன்மை தங்கியுள்ளது.

முதுதத்துவமாணிக் கற்கை நெறி முதுமாணிக் கற்கை நெறியில் இருந்து அதன் நோக்கம், ஆய்வுப்பரப்பு, ஆய்வு நெறி என்பவற்றில் வேறுபட்டதாகும். இதில் ஆய்வு தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளும் முழுக்க முழுக்க ஆய்வாளரின் சுயசெயற்பாட்டில் தங்கியுள்ளது. தான் விரும்பும் பாடநெறியில் வரையறைக்கு உட்படாது தகவல் தேட்டத்தின் அடிப்படையில் இவ்வாய்வு ஆழமாக மேற்கொள்ளப்படுவதால் இதில் ஆய்வாளர் தனக்குப் பொருத்தமான ஆய்வுத் தலைப்பை தானே தெரிவு செய்யும் உரிமையைக் கொண்டுள்ளார். இதைச் செய்து [illegible] பட்ட ஆய்வாளரைப் போல [illegible]யாக ஆய்வு வழிகாட்டலின் தயவில் தங்கியிருக்கத் தேவையில்லை இத்தகைய ஆய்வு மூலம் முன்வைக்கப்படும் கருத்துக்கள், முடிவுகள் என்பவற்றிற்கு ஆய்வுலகில் அங்கீகாரம் இருக்க வேண்டும். ஆயினும் இந்த ஆய்வின் ஊடாக முக்கியமான, சுயமான அறிவுசார் கருத்துக் களை, முடிவுகளை ஆய்வாளர் முன்வைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை.

கலாநிதிப்பட்ட ஆய்வு முதுதத்துவமாணிக் கற்கை நெறிகளில் இருந்து பல அம்சங்களில் வேறுபட்டதாகும். இந்த ஆய்வுக்கு ஆய்வாளரே முழுப்பொறுப்பாளியாவர். இதனால் இந்த ஆய்வின் பெறுபேறுகளுக்கு முழுமையான அங்கீகாரம் இருக்க வேண்டும். அத்துடன் ஆய்வாளர் தனது ஆய்வினூடாக ஆய்வுப் புலத்திற்கு புதிய கருத்துக்களை முன்வைக்க வேண்டும் எனவும் எதிர்பாக்கப்படுகிறது. அத்துடன் சில வழிகளில் இந்த ஆய்வு அதனுடன் தொடர்புடைய பாடநெறிகளுக்கு புதிய வெளிச்சத்தையும், புதிய கருதுகோள்களையும், முடிவுகளையும் தரவுகளையும் முன்வைப்பதோடு அவற்றில்


**பேராசிரியர் க. கந்தசாமி**
பேராசிரியர் பௌதீகத் துறை மற்றும் பீடாதிபதி உயர் பட்டப் பின்படிப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இருந்து மேலும் புதிய ஆய்வுகள் தோன்றுவதற்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சைதீவை திரும்பத் தரக் கேட்பதற்கு கருணாநிதிக்கு என்ன அருகதை?

## சபையில் வீரவன்ஸ காரசாரம்



கொழும்பு, ஜூலை 24

இலங்கைப் படையினரின் யுத்தநடவடிக்கையை முறியடித்துப் புலிகளையும் அவர்களின் இடங்களையும் பாதுகாக்கும் நோக்கிலும் இலங்கை - இந்திய இராஜதந்திர உறவில் நெருக்கடி நிலையை ஏற்படுத்தும் நோக்கிலும் தமிழ் நாட்டு முதலமைச்சர் கருணாநிதி செயற்பட்டு வருகிறார் என்று விமல் வீரவன்ஸ எம்.பி. நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் குற்றம் சாட்டினார்.

இலங்கை வசமிருக்கும் கச்சதீவை இந்தியா மீண்டும் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறி இவ்வாறான செயற்பாட்டில் கருணாநிதி ஈடுபட்டு வருகிறார். இலங்கை விடயத்தில் தலையிடுவதற்கும் கச்சதீவைத் திருப்பிக் கேட்பதற்கும் கருணாநி திக்கு என்ன அருகதை இருக்கிறது என் றும் விமல் வீரவன்ஸ காட்டமாகக் கேட்டார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை வெளியிட்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு காரசாரமா கச் சொன்னார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வடக்கில் படையினர் வெற்றியை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த வெற்றியைத் தடுக்கும் சர்வதேச சதித்திட்டங்கள்பல தீட்டப்படுகின்றன.

குறிப்பாக கருணாநிதி போன்ற தென் இந்திய அரசியல்வாதிகள் இவ்வாறான சதித்திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் நோக்கம் புலிகளைப் பலமடையச் செய்வதும் இலங்கை இந்திய இராஜதந்திர உறவில் பாதிப்பை ஏற்படுத்துவதும்தான்.

இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கொலை செய்கின்றனர் என்றதொரு பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தி இலங்கை வசமிருக்கும் கச்சைதீவை இந்தியா மீண்டும் பொறுப் பேற்க வேண்டும் என்று கருணாநிதி கூறியிருக் கின்றார்.

இந்திய மீனவர்களைச் சுட்டுக்கொல்வது புலிகளே தவிர இலங்கைக் கடற்படையினர் அல்லர்.

ஆனால், இந்தக் கொலைகளை எமது படையினரின் தலை யில்போட்டு கச்சைதீவை மீண்டும் இந் தியா பொறுப் பேற்க வேண்டும் என்று கரு ணாநிதி கூறுகி றார்.



இலங்கை - இந்திய இராஜதந்திர உறவையும் இலங்கையின் யுத்தவெற்றியையும் பாதிக்கும் இந்தக் கூற்றுத் தொடர்பாக இலங்கை அரச தலைவர்கள் ஒரு முடி வெடுக்க வேண்டும். இந்த விவகாரத்தை மிக நிதானமாகக் கையாளவேண்டும் - என்றார். (அ-சி)

# 'சார்க்' நாடுகள் வரிசையில் தமிழீழம் விரைவில் சேரும்!

## நாடாளுமன்றில் சிவாஜிலிங்கம்



கொழும்பு,ஜூலை 24

'சார்க்' நாடுகள் வரிசையில் தமிழீழம் மிக விரைவில் சேர்த்துக் கொள்ளப்படும் என்றும் இலங்கை அந்நாடுகள்வரிசையில்இருந்து வெகுவிரைவில்விரட்டியடிக்கப்படும் காலம் வரும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சிவாஜிலிங்கம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

'சார்க்' மாநாட்டுச் செலவுக்கான குறை நிரப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த அரசு தமிழ் மக்களைக் கொலை செய்துகொண்டு தமிழர்களின் பாதுகாவலன்போல் தன்னை சர்வதேசத்திற்குக் காட்டிக்கொள்கிறது.

பயங்கரவாதச் செயற்பாட்டை முன்னெடுக்கும் அரசு உள்ள நாடு இது என்பதை சர்வதேச நாடுகள் விளங்கிவைத்துக் கொண்டுள்ளன. இலங்கையை ஒரு பயங்கரவாத நாடாக சர்வதேச நாடுகள் மிக விரைவில் அறிவிக்கும் அதேநேரம், எமது தமிழீழத்தையும் அந்நாடுகள் ஏற்றுக் கொள்ளும்.




தமிழர்களின் உரிமைகளை மீறுகின்ற இந்த இலங்கை 'சார்க்' நாடுகளின் வரிசையில் இருந்து நீக்கப்படும் காலம் மிக விரைவில் வரும்.

இந்த நாட்டைத் தற்காலிகமாகவாவது சார்க் நாடுகள் வரிசையில் இருந்து நீக்குமாறு நாம் சார்க் நாடுகளிடம் வேண்டுகோள் விடுக்கிறோம். எமது தமிழீழம் 'சார்க்' நாடுகளின் வரிசையில் சேர்த்துக் கொள்ளப்படும் காலம் நிச்சயம் வரும்.

'சார்க்' மாநாடு முடியும்வரையிலான யுத்த நிறுத்தம் ஒன்றைப் புலிகள் அறிவித்துள்ளனர். இந்த அறிவிப்பைப் புலிகளின் பலவீனமாகப் பார்க்கக் கூடாது.

புலிகளின் இந்த அறிவிப்பைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளில் அரசு ஈடுபட வேண்டும். அவ்வாறு இல்லாது தொடர்ந்து யுத்தத்தை மேற்கொண்டால் அரசு கடும் சிக்கலை எதிர்நோக்கவேண்டி வரும்.

இன்று எமது போராட்டம் நீதியானது என்பதை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளத் தொடங்கிவிட்டன.

இந்தியா உட்பட அனைத்து நாடுக ளும் எமது தமிழீழத்தை அங்கீகரிக்கும் காலம் மிக விரைவில் வரும். இந்தியாவின் ஆசீர்வாதம் எமக்கு நிச்சயம் கிடைக்கும். - என்றார். (அ-சி)

# தெற்காசியா முழுவதும் பயங்கரவாதத்தை முற்றாக அழிக்கும் சக்தி 'சார்க்' மூலம் கிட்டும்

## அதற்காகத்தான் இவ்வளவு ஏற்பாடு என்கிறார் போகோல்லாகம



கொழும்பு,ஜூலை 24

கொழும்பில் நடைபெறவுள்ள 'சார்க்' மாநாட்டின் ஊடாக முழு 'சார்க்' பிராந்தியத்திலும் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்டுவதற்கான சக்தி கிடைக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நாடாளுமன்றில் கூறினார். அதற்காகத்தான் அரசு இம்மாநாட்டுக்காக இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்துவருகின்றது - என்றும் அவர் சொன்னார்.

'சார்க்'மாநாட்டுச் செலவிற்கான குறை நிரப்புப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து அதன்மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:

'சார்க்' மாநாடு இலங்கையில் நடைபெறுவதன்மூலம் இலங்கைக்கு அதிகம் நன்மைகள் கிடைக்கும். இதன் ஊடாக வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகரிப்பதோடு 'சார்க்' பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கான சக்தியும் கிடைக்கும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதைத் தொடர்ந்து வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகரித்துள்ளன. ஆசிய நாடுகளுடன் அதிக தொடர்புகள் ஏற்பட்டுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷவால் இலங்கையில் நிலைநாட்டப்பட்டு வரும் ஜனநாயகம் பற்றி சர்வதேச நாடுகளுக்கு நாம் விளக்கம் கொடுத்து வருகிறோம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் 10 வருடங்களுக்குப் பிறகு இப்போது இலங்கையில் 'சார்க்' மாநாடு நடைபெறப் போகிறது.

இதன் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சார்க் நாடுகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட சக்தி கிடைக்கும்.

ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி சார்க்கின் தலைமைத்துவப் பதவி இலங்கைக்குக் கிடைக்கும் - என்றார். (சி)

## இலவச சட்ட சேவையும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு நிறுவனம் நடத்தும் நடமாடும் இலவச சட்டசேவையும், சட்டம்பற்றி விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒருமணி வரை நடைபெறவுள்ளன.

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறவுள்ள இச் சேவையில் ஜே/84, ஜே/85, ஜே/87, ஜே/88 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட சட்டசேவை தேவைப்படும் மக்கள் பயன்பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (203)

# இந்திய, பாகிஸ்தான் தலைவர்கள் 'சார்க்'குக்கு வருவது நிச்சயமில்லை

கொழும்பு, ஜூலை 24

கொழும்பில் நடைபெறும் சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியா மற்றும் பாகிஸ்தான் தலைவர்கள் இலங்கை வருவது நிச்சயமில்லை என்கிறார் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஜோன் அமரதுங்க.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சார்க் மாநாட்டு செலவிற்கான குறை நிரப்புப் பிரேணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷவின் வெளிநாட்டுக் கொள்கை வெற்றிகரமானதாக இல்லை. அவர் 'சார்க்'கின் தலைமைத்துப் பதவியைப் பெற்றுக் கொள்வதற்காகவே இங்கு சார்க் மாநாட்டை நடத்துகிறார்.

தான் சார்க்கின் தலைவர் என்று கூறி தேர்தலில் மக்களிடம் வாக்குக் கேட்பதே மஹிந்தவின் நோக்கம். அதற்காகவேதான் இந்த மாநாடு இங்கு நடத்தப்படுகிறது.

இந்த மாநாட்டுக்காக எத்தனை வீடுகள் உடைக்கப்பட்டாலும் அது பற்றி இந்த அரசுக்குக் கவலை இல்லை. எதைச் செய்தாவது தனது பெயரைக் காப்பாற்ற வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கம்.

இவ்வாறான நோக்கங்களால்தான் சர்வதேச மட்டத்தில் அரசுக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. அரசுக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சர்வதேச மட்டத்தில் அதிகரித்துள்ளன.

இப்போது நடைபெறவுள்ள 'சார்க்' மாநாட்டுக்காக அதிகப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளதோடு மக்கள் மீது அதிக பாதுகாப்புக் கெடுபிடிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இருப்பினும் இதில் கலந்துகொள்வதற்காக இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தலைவர்கள் இலங்கை வருவது நிச்சயமில்லை என்றே நம்பிக்கையாக அறியவந்துள்ளது - என்றார். (அ-சி)



சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூல்நிலையத்தில் ஒரு 'புத்தகம் ஒரு சமுதாயம்' நூல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களை முதலாவது [illegible] நூலாசிரியர் நா.நல்லதம்பி உரையாற்றுவதையும், அருகில் திருமதி த.சிவகுமாரன், நூல[illegible] உறுப்பினர் வ.நாகராசா, நிகழ்வின் தலைவர் வே.சிவகுமாரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பௌத்த நெறி பிரவகித்த தேசத்தில் இரத்த வெறி பீறிட்ட கேவலம்

இருபத்தியைந்து வருடங்களுக்கு முன்னர் தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாதம் இந்தத் தேசத்தில் கிணறு வெட்டப்போய் அங்கு பூதம் கிளம்பிய கதை குறித்து இப்போதும் பேசப்படுகின்றது.

'கறுப்பு ஜூலை' என்ற கொடூரக் கிணறைத் தமிழர்களுக்கு எதிராக அச்சமயம் வெட்டிய தென்னிலங்கைச் சமூகம், அப்போது கிளம்பிய பூதத்தின் நாசச் செயல்களை இன்றும் - இன்னும் - எதிர்கொண்டு அனுபவித்து அல்லாடிக்கொண்டு நிற்கிறது.

அன்று கிளம்பிய கறுப்பு ஜூலைப் பூதத்தின் இருபத்தியைந்தாவது ஆண்டில் நாம் இப்போது நிற்கிறோம்.

ஈழத் தமிழர்களின் பாரம்பரிய வரலாற்றில், அவர்களின் தேசிய ஆன்மாவில் ஆறாத வடுவை - மாறாத புண்ணை - ஆழமாக ஏற்படுத்திய பெரும் துன்பியல் நிகழ்வே இந்தக் கறுப்பு ஜூலைக் கலவரமாகும்.

அஹிம்சையையும் அன்பையும் போதித்த காருண்ய சீலரான மகான் கௌதம புத்தரின் உயர்ந்த நெறி பிரவகித்த இலங்கைத் தீவில், அந்த மதத்தின் பெயரால் தூண்டப்பட்ட குரோதம் காரணமாக மனிதத்துவமற்ற மிருகத் தனமும், நாகரிகமற்ற கொடூரமும், முரட்டுப் போக்குடன் கூடிய மிலேச்சத்தனமும் நிறைந்து, இரத்த வெறி பீறிட்டது. இது எங்ஙனம் சாத்தியம் என்று உலகம் இன்றும் பேதலித்து நோக்குகின்ற அளவுக்கு எல்லை மீறிய குரூரம் அச்சமயம் இங்கு அரங்கேறியது.

1956,1958,1974,1979,1981 என இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராக பௌத்த - சிங்களப் பேரினவாதத்தினால் திட்டமிட்டு அவ்வப்போது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூர வன்முறைக் கலவரங்களின் தொடராகவே 1983 இன் கறுப்பு ஜூலைக் கொடூரமும் அமைந்தது.

ஆனால் 1983 இல் மிகக் குரூரமாகவும் கோரமாகவும் கொடூரமாகவும் இடம்பெற்ற இந்த வன்முறைப் புயல், இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியமும், சிங்களத் தேசியமும் இனி ஐக்கியமாக ஒரு தேசக் கட்டமைப்புக்குள் வாழ முடியவே முடியாது, அது சாத்தியமற்றது என்ற உண்மையைத் தமிழர்களுக்கு முரசறைந்து உணர்த்தியது என்பதே நிஜம்.

தமிழ்த் தேசியமும், சிங்களத் தேசியமும் சுட்ட மண். அவை இனி ஒட்டா என்ற யதார்த்தத்தைத் தமிழர்களுக்கு நன்கு புரிய வைத்ததே இந்தக் கறுப்பு ஜூலைக் கலவரமே என்றால் அது மிகையாகாது.

இலங்கைத் தீவில் தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனமாக விளங்குவதற்கு அடிப்படை ஆதாரங்களாகத் திகழ்ந்த கட்டமைப்புகளை அடியோடு தகர்க்கும் இலக்கோடு, அவற்றைக் குறிவைத்தே இந்த இனக் கலவரங்கள் அவ்வப்போது கட்டவிழ்த்து விடப்பட்டன என்பதும் வெளிப்படை.

ஆனால் இந்தத் தொடர் கலவரங்களும், அவற்றின் உச்சமாக 1983 ஜூலையில் இடம்பெற்ற மிக மோசமான கொடூரமும் ஈழத் தமிழர்களின் வாழ்வியல் போக்கில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்தின என்பதே கவனிக்கத்தக்க விடயமாகும்.

கௌரவமான வாழ்வுரிமை குறித்து - தங்களின் விடுதலை குறித்த இலக்குத் தொடர்பாக - தங்களின் போராட்டப் பாதை பற்றி - ஈழத் தமிழர்கள் தீர்க்கமானதும், உறுதியானதும், தெளிவானதுமான ஒரே முடிவைத் தீர்மானிக்கும் வாய்ப்பை இந்தக் கலவரக் கொடூரங்களே ஏற்படுத்திக் கொடுத்தன.

இனக்கலவரம் என்ற பெயரில் பௌத்த - சிங்களப் பேரினவாதம் தமிழர்களுக்கு எதிராகப் புரிந்த பல்பரிமாண ஒடுக்குமுறையின் பாதிப்பு ஈழத் தமிழர்களின் ஆன்மாவில் ஆழமான வடுவை ஏற்படுத்தி புதிய விளைவுகளுக்கு வழிகாட்டிற்று.

இலங்கைத் தீவின் இரு பெரும் தேசியங்களான தமிழர் தேசம், சிங்களவர் தேசம் ஆகியவற்றுக்கு இடையில் நல்லிணக்கம், சமரசம், சகவாழ்வு ஆகியவற்றுடன் கூடிய ஐக்கியமோ, ஒரே கட்டமைப்பு ஆட்சி முறையின் கீழ் அதிகாரத்தைப் பகிர்ந்து கூட்டாக வாழ்வதோ அசாத்தியமானவை என்ற பட்டறிவைத் தமிழர்களுக்கு இந்தக் கலவரக் கொடூரங்கள் ஆழமாக உணர்த்தி நின்றன.

அது தமிழர்களின் விடுதலை நோக்கிய தீவிரப் போக்கையும், போராட்ட உணர்வையும் தீவிரப்படுத்தியது.

அத்தோடு, தமிழர்களின் சுதந்திர உரிமையை இறுதியானதும் உறுதியானதுமான இலக்காகக் கொண்டு போராடும் ஆயுதம் தரித்த எதிர்ப்பு இயக்கம் ஒன்று முழு அளவில் தோற்றம் பெற்று அது விஸ்வரூபம் எடுப்பதற்கான வித்தை ஊன்றி, அதற்கு உரமிடும் பங்களிப்பையும் இந்தக் கலவரக் கொடூரமே நிறைவேற்றியது.

தமிழர்களின் தேசியக் கட்டமைப்பைச் சிதைத்தழிக்கும் நோக்குடன் பேரினவாதம் ஏவிவிட்ட இந்தக் கலவரம் அதற்கு மாறாக, தமிழ்த் தேசியம் பற்றிய சிந்தனையில் மறுமலர்ச்சியையும், புரட்சியையும் ஏற்படுத்தி, அந்தப் போராட்டம் வீறுகொண்டெழ வழிவகுத்தது. இதன் மூலம் தென்னிலங்கையின் நோக்கம் 'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக'முடிந்தது; 'கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய' கதையாயிற்று.

ஈழத் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் செல்நெறியை சரியான பாதையில் - தடத்தில் - தூக்கி நிறுத்தி, அது தொடர்பான இலக்கைச் செப்பனிட வைத்தது இந்தக் கறுப்பு ஜூலைக் கொடூரம்தான் என்பது, அதனை ஏவிவிட்ட சிங்களத்துக்குக் கிடைத்த பெரும் தோல்வியும் பின்னடைவுமாகும்.

# கச்சதீவுக் கடல் எல்லைக்குள் சென்ற தமிழகப் படகுகள் ஓட ஓட விரட்டியடிப்பு

## மீனவர் ஏமாற்றத்துடன் கரை திரும்பினர்

ராமேஸ்வரம், ஜூலை 24

கச்சதீவுக் கடல் எல்லைக்குள் நுழைந்த தமிழகப் படகுகளை, இலங்கைக் கடற்படையினர் ஓட ஓட விரட்டியடித்தமையால் மீன்பாடு இல்லாமல் மீனவர்கள் ஏமாற்றத்துடன் கரை திரும்பினர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இதுகுறித்து வெளியான செய்திகள் வருமாறு:-

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூடு, நிர்வாணப்படுத்தி சித்திரவதை போன்ற நடவடிக்கைகளைக் கண்டித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ராமேஸ்வரம் மீனவர்கள், தமிழக முதல்வருடன் நடத்திய பேச்சைத் தொடர்ந்து போராட்டத்தைக் கைவிட்டனர். அதன்படி கடந்த திங்கட்கிழமை மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர்.

மீன்பிடித்துறையின் அனுமதி பெற்ற 700இற்கும் மேற்பட்ட படகுகள் மீனவர்களுடன் அதிகாலையில் கடலில் அணிவகுத்துச் சென்றன. நடுக்கடலில் கப்பல்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இந்தியக் கடற்படையினர், இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிச் செல்லவிடாமல் படகுகளைத் தடுத்து நிறுத்தினர். பகல் முழுவதும் இந்தியக் கடல் பகுதிக்குள் மீன்பிடித்த மீனவர்கள் இரவில் கச்சத்தீவு கடல் பகுதிக்குள் செல்லத் தொடங்கினர். கச்சத்தீவு அருகே சென்ற மீனவர்களைத் தடுத்து நிறுத்திய இலங்கைக் கடற் படையினர் எச்சரிக்கை செய்து அவர் களை ஓட ஓட விரட்டியடித்தனர். இரவு முழுவதும் இந்திய - இலங்கைக் கடற்படையினரின் கண்காணிப்பு வளையத் துக்குள் இருந்த மீனவர்கள் மீன்பாடு இல்லாமல் நேற்றுமுன்தினம் காலை பெரும் ஏமாற்றத்துடன் கரை திரும்பினர்.

கரை திரும்பிய மீனவர்கள் கூறுகையில்-

கச்சதீவுக் கடல் பகுதியில் 30இற்கும் மேற்பட்ட கப்பல்களில் வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களின் படகுகளைச் சுற்றிவளைத்து கச்சதீவுக்கு அப்பால் செல்லவிடாமல் தடுத்து விரட்டியடித்தனர். - என்றனர்.

(சி)

## கரவெட்டிப் பிரதேச ஓய்வூதியர் கவனத்திற்கு..

கரவெட்டி, ஜூலை 24

கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் விவசாயிகள் ஓய்வூதியம் பெறுபவர்கள் இனி வரும் மாதங்களில் முதல் வாரத்திலேயே ஓய்வூதியத்தை பெறுமாறு கரவெட்டிப் பிரதேச அஞ்சலக அதிபர் எஸ். வினாயகநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

பெறத் தவறுபவர்களின் ஓய்வூதியப் பணத்தைத் திருப்பி அனுப்ப நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

(202-70)

## ராமேஸ்வரம் மீனவர்களில் ஒன்பது பேர் செவ்வாய் இரவுவரை மீளத் திரும்பவில்லை

ராமேஸ்வரம், ஜூலை 24

ராமேஸ்வரத்திலிருந்து 18 நாள்களுக்குப் பின் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 9 மீனவர்கள் செவ்வாய் இரவு வரை கரை திரும்பவில்லை என மீன் பிடித்துறையினர் தெரிவித்தனர்.

இதனால் ராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் பெரும் பதற்றமும் பீதியும் நிலவுகின்றன எனத் தெரிவிக்கப் படுகிறது.

மேலும் இதுகுறித்து வெளியான செய்திகள் வருமாறு-

ராமேஸ்வரத்திலிருந்து திங்கட்கிழமை மீன்பிடித்துறையின் அனுமதி பெற்று 746 விசைப்படகுகள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றன.

இதில் ராமேஸ்வரம் ராமசாமி, லூர்து ஆகியோருக்குச் சொந்தமான விசைப் படகில் சென்ற மீனவர்கள் தில்லை முத்து, காளிதாஸ், சதீஸ், வெள்ளைச்சாமி, முனியசாமி மற்றும் படகு உரிமையாளர் லூர்து, அதில் இருந்த மீனவர்கள் கருப்பணன், சிவிசன், பாலு ஆகிய 9 பேர் செவ்வாய் இரவுவரை கரைதிரும்பவில்லை என மீன் பிடித்துறையிடம் படகு உரிமையாளர்களின் உறவினர்கள் முறைப்பாடு செய்தனர்.

இதையடுத்து, 2 படகுகளையும் அதிலிருந்த 9 மீனவர்களையும் தேடி மீன்பிடித்துறையின் அனுமதி பெற்று மற்றொரு படகில் மீனவர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர் என மீன்பிடித்துறையினர் தெரிவித்தனர்.

(சி)

## மன்மோகனின் வெற்றிக்கு அமெரிக்கா வரவேற்பு

புதுடில்லி, ஜூலை 24

நம்பிக்கை வாக்கெடுப்பில் மன்மோகன் சிங் அரசு வெற்றி பெற்றமைக்கு அமெரிக்கா வரவேற்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் டேவிட் முல் போர்டு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசு வெற்றி பெற்றுள்ளமையைத் தொடர்ந்து, இந்தியா - அமெரிக்கா இடையேயான அணுசக்திப் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த ஒப்பந்தம் விரைவில் நிறைவேற, இந்தியாவுடன் அமெரிக்காவும் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளும் - எனவும் அவர் கூறியுள்ளார்.

(சி)

## வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் ஐந்து கல்வியியலாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 25 வருட ஆசிரியப் பணி மேற்கொண்ட 5 கல்வியியலாளர்கள் கல்லூரிச் சமூகத்தினால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் 30ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு தென்னிந்தியத் திருச்சபை ஆதீனத்தில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்லூரியின் வளர்ச்சி, அபிவிருத்திக்கு 25 வருட கல்விப் பணியை மேற்கொண்ட கல்வியியலாளர்களான வண. ஜி.நடராஜா (ஆரம்பப் பாடசாலை அதிபர், அதிவிசேட தரம் - I), திருமதி ஜொய்ஸ் ஜெயந்தினி மித்திர ரஞ்சன் (விஞ்ஞான பாட சிரேஷ்ட ஆசிரியை, விஞ்ஞானத்துறைத் தலைவர்), திருமதி சாந்தா ஜசோதரன் (தமிழ்த்துறைத் தலைவர், இணைப்பாளர் - சைவபரிபாலனசபை, சிரேஷ்ட ஆசிரியை)- நவராஜா யோகராஜா (ஆசிரிய உதவியாளர், கல்லூரி சேவை அத்தியட்சகர்), திருமதி எஸ்.ஜெ.தேவசகாயம் (சிரேஷ்ட ஆசிரியை) ஆகியோருக்கே கௌரவிப்புவிழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் வெள்ளிவிழா நாயகர்களை வாழ்த்தி முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அருளுரையாற்றவுள்ளார்.

(202-95)

## 'சார்க்' நட்புறவுக் கிராமம் 27ஆம் திகதி அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஜூலை 24

கொழும்பில் நடைபெறவுள்ள 15ஆவது 'சார்க்' உச்சி மாநாட்டை முன்னிட்டு கண்டி, நாவலப்பிட்டியில் அமைக்கப்பட்டிருக்கும் 'சார்க்' நட்புறவுக் கிராமம் எதிர்வரும் 27ஆம் திகதி வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நாவலப்பிட்டி தேர்தல் தொகுதியிலுள்ள மஹவிலவத்த தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இக்கிராமத்தில் 100 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையில் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ள அங்குரார்ப்பண வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இவ்வீடுகளை மக்களிடம் கையளிக்கவிருக்கிறார்.

இந்த வீடுகளை அமைப்பதற்காக ஒவ்வொரு வீட்டு உரிமையாளருக்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் கடனுதவி வழங்கியுள்ளது. இவ்வீடமைப்புத் திட்டத்துக்கு 500 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதோடு இவற்றில் 25 இலட்சம் ரூபாவை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முதலிட்டுள்ளது.

அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமவின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் கடந்த ஏப்ரல் மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவ்வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் 100 நாள்களில் முடிவடைந்துள்ளன என்றும் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

(ப)

### நாளை

| | |
|---|---|
| ஆடி 10 | 25.07.2008 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | மு.ப.10.45 வரை |
| நட்சத்திரம் : | ரேவதி |
| சுபநேரம் : | 06.02 - 07.32 |
| ராகுகாலம் : | 10.32 - 12.02 |

## இலங்கையில் தொடர்கிறது பதற்றம் இந்தியா செல்ல தமிழர்கள் துடிப்பு

### தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு

ராமேஸ்வரம், ஜூலை 24

இலங்கையில் பதற்றமான சூழ்நிலை தொடர்வதால் தமிழகம் வருவதற்கு ஏராளமான ஈழத் தமிழர்கள் படகுகளுக்காகக் காத்திருக்கின்றனர் என்று ராமேஸ்வரம் வந்தடைந்த அகதி ஒருவர் கூறியுள்ளார் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இதுதொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-


இலங்கை வவுனியாவைச் சேர்ந்த 14 அகதிகள் நேற்றுமுன்தினம் ராமேஸ்வரம் வந்தனர். கடந்த திங்களன்று மாலை நான்கு மணிக்கு பேசாலைக் கடற்கரையிலிருந்து படகில் புறப்பட்ட இவர்கள் இரவு 10 மணிக்குத் தனுஷ்கோடி அரிச்சல் முனைக் கடற்கரையில் வந்திறங்கினர்.

அகதி தர்மலிங்கம் கூறுகையில்,

''இலங்கையில் பதற்றமான சூழ்நிலை நிலவுவதால் தமிழர்கள் அதிகளவில் இங்கு அகதிகளாக வருவதற்குத் திட்டமிட்டுள்ளனர். நாங்கள் வவுனியாவிலிருந்து புறப்பட்டு பேசாலை வந்தோம். தலா ரூ.10 ஆயிரம் கொடுத்துப் படகில் வந்தோம். வழியில் இலங்கைக் கடற்படைக் கப்பல்கள் ரோந்துசென்றன. கடற்படையினரின் கண்களில் படாமல் படகோட்டிகள் எங்களை தனுஷ்கோடியில் இறக்கிவிட்டனர். இங்கு அகதிகளாக வருவதற்கு படகு கிடைக்காமல் ஏராளமான தமிழர்கள் பேசாலையில் காத்திருக்கின்றனர்'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கலைமகள் உருவச்சிலை திறப்பு விழாவின் பதிவுகள்.
வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா மங்கள விளக்கேற்றுவதையும் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் உருவச்சிலைக்கு மாலை அணிவிப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்டோரை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்:சுந்தா)


## ஆங்கில சுருக்கெழுத்தாளர் தேவை

நிர்மாண ஒப்பந்த பிணக்குகள் தீர்ப்பதற்கான நியாய விசாரணைக்கு (Adjudication) நாளாந்த அடிப்படையில் குறுகிய கால சேவையினை அளிப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஆங்கில சுருக்கெழுத்தாளர் ஒருவரின் சேவை தேவைப்படுகிறது.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**உருத்திரா பொறியியல்**
**கட்டடக்கலை மதியுரை சேவை அகம்,**
474, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (76600)



## Wanted-Marketing Officer

A marketing officer is required for a well established organization. The person we have in mind should be reasonably qualified educationally and have knowledge ablity and flair for marketing. Persons with experience will be given preference. If selected he will head a department which will directly deal with marketing strategies. Salary Negotiable.Please apply with curriculam vitae to:

**No.3118, C/O UTHAYAN Jaffna.**


## கண்ணீர் அஞ்சலி



எமது குடும்ப உறவினரும்,
சிறிய தந்தையாருமாகிய

**அமரர் நாகநாதி கார்த்திகேசு**

*(இளைப்பாறிய அதிபர், ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் - புங்குடுதீவு)*

அவர்களின் பிரிவுத் துயரம் அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
**து.குருநாதசிவம்** J.P. (பெறாமகன்)
(சி/553865)

## ஓர் ஆய்வின்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ஆய்வுகளும் வெளியீடுகளும

ஓர் ஆய்வு எழுத்து வடிவில் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிப்பதோடு அந்த ஆய்வு முடிவடைவதால் அதன் மூலம் ஒரு சிலர் மட்டும் அதுவும் பல்கலைக்கழகத்திற்குள் ஆய்வைத் தொடரும் ஒருசிலர் மட்டுமே நன்மையடைய முடியும். ஆனால் பல கலைக்கழகத் திற்குள் மட்டும் அடக்கப்படும். இந்த ஆய்வு நூலாக வெளிவரும்போது அதன் கருத்துக்கள் பலதரப்பட்ட மக்களிடமும் சென்றடைகிறது. இதன் மூலம் எம்மைச் சேர்ந்த சமூகம் மட்டு மன்றி குறிப்பிட்ட ஆய்வைச் செய்த ஆய்வாளரும் பல்கலைக்கழகச் சமூகமும் பல நன்மைகளை அடையமுடியும்.ஓர் ஆய்வின் தரம், ஆய்வாளரின் ஆய்வுப் புலமை, அறிவுத்திறன், ஆய்வு அனுபவம் என்பற்றை எடுத்துக் காட்டுவது ஆய்வின் இறுதியில் முன்வைக்கப்படும் முடிவில் தங் கியுள்ளது. இந்த முடிவுகள் ஆய்வின் தன் மைக்கு ஏற்ப வேறுபட்டதாக இருப்பினும் அந்த முடிவில் பின்வரும் அம்சங்கள் எதிர் பார்க்கப்படு வது தவிர்க்க இயலாது.

* மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள்.
* பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வைக்கப்பட்ட தீர்வுகள்.
* இதுவரை அறியப்படாது இருந்த விடயங்கள் இந்த ஆய்வின் மூலம் வெளிக கொணரப்பட்டதைச் சுட்டிக்காட்டி அவை என்ன என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லுதல்.
* இதுவரை கூறப்பட்ட கருத்துக்கள் தவறானவை என்பதை நிருபித்து புதிய கருத துக்கள் எவை என்பதை ஆதாரங் களுடன் எடுத்துக் காட்டுதல்.
* இவ்வாய்வில் இருந்து அடையப்படும் நன்மைகள், குறிப்பாக சமூக நன்மைகள்.
* இந்த ஆய்வின் மூலம் புதிய ஆய்வுக்கு வழியமைத்துக் கொடுத்த அம்சங்கள் எவை என்பதைச் சுட்டிக்காட்டுவது.

கல்விசார் ஆய்வில் பின்பற்றப்பட வேண்டிய ஆய்வு நெறிமுறையின் முக்கிய அம்சங்களை எடுத்துக் கூறுவதாகும். அந்த இலக்கை முடிந்த அளவுக்கு எனக்கு வழங்கப்பட்ட நேரத்திற்குள் முடித்திருப்பதில் திருப்தியடைகிறேன். ஓர் ஆய்வைச் சிறப்பாகச் செய்து முடிப்பதற்கு பொருத்தமான தலைப்பைத் தெரிவு செய்வது ஆய்வாளருக்கு அவசியமாகும். அவற்றைக் கண்டு பிடிப்பதற்கும், ஆய்வை ஒழுங்கு முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கும் ஆய்வு விடயத்துடன் , ஆய்வு முறையுடன் சம்பந்தப்பட்ட இலக்கியங்கள் ஊடான அறிவும், ஆய்வு நெறிமுறைகளும் எமக்கு உதவியாக உள்ளன. ஆனால் ஒரு நுண்ணிய ஆய்வை மேற்கொள்வதற்கு இவைதான் கட்டாய வரையறை என்று அடித்துக் கூறமுடியாது. ஆனால் விஞ்ஞான அணுகுமுறையில் ஓர் ஆய்வாளன் தான் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஆய்வை என்ன வழிமுறைகளை பின்பற்றினால் அதை பூரணமாகச் செய்து முடிக்க லாம் என்பதற்கு வரையறுக்கப்பட்ட அணுகு முறைகள் உண்டு. அவை சமூக விஞ்ஞான ஆய்வுகளுக்கும் பொருந்தும் என்பது எனது கருத்தாகும்.

(முற்றும)


யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரியின்
வளர்ச்சி நிதிக்காக
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரியின்
பழைய மாணவர் சங்கம் வழங்கும்

## "கலை விருந்து"

*(இசை, நடன நிகழ்வுகள்)*

இடம்: விசாலாட்சி மண்டபம்
காலம்: 26.07.2008 சனிக்கிழமை
நேரம்: பி.ப.1 மணி யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவர்கள்.
பிரதம விருந்தினர்: திருமதி அருளீஸ்வரி வேதநாயகம் [கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம்]
காலம்: 27.07.2008 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9 மணி ஏனைய பாடசாலை மாணவர்கள்.
பிரதம விருந்தினர்: செல்வி புஷ்பா செல்வநாயகம் (பழைய மாணவர் சங்கம்.)
காலம்: 27.07.2008
நேரம்: மதியம் 2 மணி - பொதுமக்களுக்கு
பிரதம விருந்தினர்: திரு E.S.P. நாகரத்தினம் (பிரபல வர்த்தகர்)

இந்நிகழ்வினைக் கண்டுகளிக்க அனைவரையும் அழைக்கின்றோம்.

குறிப்பு: 26.07.2008 மாலை நிகழ்வுக்குரிய நுழைவுச் சீட்டு, 27.07.2008 காலை அனுமதிக்கப்படும்.

பழைய மாணவர் சங்கம்,
(76590) யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி.


## நன்றி நவில்கின்றோம்



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி ஸ்ரீ நாராயணர் (கண்ணன்) தேவஸ்தான கட்டட வளர்ச்சிக்காக நிதியுதவியளித்த சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சரும், வட மாகாண விசேட செயலணிக்குழுத் தலைவருமான

**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களை நன்றியோடு பாராட்டி, அவர்கள் பணி மேன்மேலும் சிறக்க எல்லாம் வல்ல ஸ்ரீ நாராயணரைப் பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (76589)

ஸ்ரீ நாராயணர் (கண்ணன்) தேவஸ்தான
பரிபாலன சபையினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக் கிருத்திய அழைப்பும்



திருமதி
**சிவபாக்கியம் சுப்பிரமணியம்**

தோற்றம்
26.12.1937

மறைவு
24.06.2008

கடந்த 24.06.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் சிவபாக்கியம் சுப்பிரமணியம் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய நிகழ்வும் இன்று (24.07.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

அத்தருணம் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

## நெஞ்சகலாத நினைவஞ்சலி

| 25ஆம் ஆண்டு | 25ஆம் ஆண்டு | 12ஆம் ஆண்டு |
|---|---|---|
|  |  |  |
| அமரர் எஸ்.சரவணமுத்து B.A. (லண்டன்) (இளைப்பாறிய ஆசிரியர்) | அமரர் சு.கலாபரமேஸ்வரன் (M.A.) [முன்னாள் திட்டமிடல் அதிகாரி] | அமரர் தி.சுப்பிரமணியம் [இளைப்பாறிய விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர், புத்தூர்] |
| பிறப்பு: 19.04.1901 | 02.08.1944 | 23.03.1906 |
| இறப்பு: 24.07.1983 | 24.07.1983 | 06.05.1996 |

தங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கும்

"இலட்சுமி பதி",
...பலாலி றோட், திருநெல்வேலி.

குடும்பத்தினர்.
சுன்னாகம் றோட், புத்தூர். (76588)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்

# மழை குழப்பிய முதல் நாளில் இலங்கை அணி 85-2

கொழும்பு, ஜூலை 24

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி, நேற்றைய மழை குழப்பிய முதல் நாளில் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 85 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கொழும்பு எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நேற்று ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியின் பெரும் பகுதி மழை காரணமாகத் தடைப்பட்டது. நேற்று மாலை 3 மணியளவில் - தேநீர் இடைவேளைக் குப் பின்னரே ஆட்டம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்ப வீரரான மைக்கல் வன்டோட் வெறும் 3 ஓட்டங்களுடன் இஷாந்த் சர்மாவின் வேகத்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து இணைந்த வர்ணபுர - சங்ககார ஜோடி தம்மிடையே 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இந்நிலையில் சங்ககார 12 ஓட்டங்களுடன் சஹீர்கானின் வேகத்தில் டிராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மற்றைய ஆரம்ப வீரரான மலிந்த வர்ணபுர, டெஸ்ட் அரங்கில் 3ஆவது அரைச்சதம் அடித்துப் பிரகாசித்தார். நேற்றைய முதல்நாள் ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக முன்னதாகவே நிறுத்தப்பட்ட போது இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 22 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 85 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வர்ணபுர 50 ஓட்டங்களுடனும், மஹேல ஜெயவர்த்தன 16 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.



இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் தொடரும்.

## உலகக் கிண்ணப் போட்டியின் முன்னர் ஓய்வு என மத்தியூ ஹைடன் அறிவிப்பு

சிட்னி, ஜூலை 24

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன்பாக கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளார் என்று ஆஸ்திரேலிய அணியின் தொடக்க வீரரான மத்தியூ ஹைடன் கூறியுள்ளார்.

ஹைடன் உலகின் மிகச் சிறந்த ஆரம்ப வீரர்களில் ஒருவராகத் திகழ்கிறார். சமீப காலமாக அவர் அதிரடியாக ஓட்டங்கள் குவிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், 2011 ஆம் ஆண்டு இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பாக ஓய்வு பெற்று விடுவேன் என்று ஹைடன் கூறியுள்ளார்.

தற்போது தனக்கு 36 வயது ஆகின்றது. இளைய தலைமுறை ஆட்டக்காரர்களுக்கு வழி விடுவதற்காக ஓய்வு பெறப் போகின்றார் என்றும் அவர் கூறியுள்ளார்.

## இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை அபாரமாக ஆடி எளிதில் கைப்பற்றுவோம்!

### மார்தட்டுகிறார் தென்னாபிரிக்க அணித்தலைவர்

லீட்ஸ், ஜூலை 24

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை, அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி எளிதில் கைப்பற்றுவோம் என தென்னாபிரிக்க அணித்தலைவர் கிரேம் சிமித் மார்தட்டியிருக்கின்றார்.

இங்கிலாந்துக்குக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள கிரேம் சிமித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலில் விளையாடுகிறது. லோட்ஸில் நடந்த முதல் டெஸ்ட் வெற்றிதோல்வியின்றி முடிந்தது. இந்நிலையில் லீட்ஸில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி துடுப்பாட்டம், பந்துவீச்சில் அசத்தி பத்து விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 1-0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது.

இந்த வெற்றி குறித்து தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் கூறியவை வருமாறு:- இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் எங்களின் பந்துவீச்சு சுமாராக இருந்தது. ஆனால், லீட்ஸில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பந்துவீச்சில் பல மாற்றங்களை ஏற்படுத்தியதால் இங்கிலாந்துத் துடுப்பாட்ட வீரர்களை எளிதில் வீழ்த்தினோம். முதல் இன்னிங்ஸில் மோர்கீல், ஸ்ரைன் இருவரும் மிகத் துல்லியமாகப் பந்துவீசி தொடக்க வீரர்களை வெளியேற்றினர்.

முதல் டெஸ்ட் போட்டியில் பந்துவீச்சில் செய்த தவறுகளை விரைவில் திருத்திக்கொண்டதால் எளிதில் வெற்றி பெற முடிந்தது. துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை பிரின்ஸ் மற்றும் டீ வில்லியர்ஸ் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் முதல் இன்னிங்ஸில் இமாலய ஓட்டஎண்ணிக்கையைப் பதிவு செய்ய முடிந்தது. இந்த அசத்தல் ஆட்டம் இனிவரும் போட்டிகளிலும் தொடரும் பட்சத்தில் அடுத்த இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவோம். - இவ்வாறு சிமித் கூறினார்.

## 36 வயது ஓய்வு பெறும் வயதா?

### கங்குலி ஆவேசம்

கொழும்பு, ஜூலை 24

36 வயது ஓய்வு பெறும் வயதா என்று முன்னாள் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி ஆவேசமாக கேள்வி எழுப்பியுள்ளார்.

கங்குலி ஒருநாள் போட்டிகளுக்கான இந்திய அணியில் தற்போது சேர்க்கப்படுவதில்லை. சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான இந்திய உத்தேச அணியிலும் அவர் தேர்வு செய்யப்படவில்லை. ஒருநாள் போட்டி அணியில் இளம் வீரர்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாகத் தேர்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து கங்குலி உள்ளிட்ட மூத்த வீரர்கள் ஓய்வு பெறவேண்டும் என்று பேசப்பட்டு வருகிறது. ஆனால், கங்குலி ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் எண்ணமில்லை என்று தெரிவித்துள்ளார். கொழும்பில் அளித்த பேட்டியொன்றில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

இளம் வீரர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த வீரர்கள் பற்றிய பேச்சு எனக்கு அலுத்து விட்டது. இந்தியாவில் மட்டும்தான் வயதை ஒரு பிரச்சினையாக நினைக்கிறார்கள். இலங்கையில் ஜெயசூரியா 39 வயதிலும் விளையாடிக் கொண்டிருக்கிறார். முரளிதரனுக்கு 36 வயதாகிறது. ஹைடன் 36 வயதுக்கு மேல் ஆடிக் கொண்டிருக்கிறார். 36 வயது ஓய்வு பெறும் வயதா? 36 வயதுக்கு மேல் ஆகியும் பிரகாசிக்கும் வீரர்கள் பலர் உள்ளனர்.



ஓய்வு பெறும் எண்ணம் எனக்கு இல்லை. இப்போதைக்கு டெஸ்ட் போட்டிகளில் கவனம் செலுத்த விரும்புகிறேன். ஒருநாள் போட்டிகள் பற்றி யோசிப்பதை நிறுத்திக் கொண்டு விட்டேன். - இவ்வாறு அவர் கூறினார்.

இலங்கைக்கு எதிரான தொடரில் இந்தியா சிறப்பாக விளையாடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இலங்கையின் இளம் பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் பந்து வீச்சை கவனத்தோடு கையாள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். ஆசியக் கிண்ணத் தொடரில் மெண்டிஸ் தனி நபராக அணிக்கு வெற்றியைத் தேடித் தந்ததை மறந்து விடக் கூடாது என்று கங்குலி மேலும் கூறியுள்ளார்.

# சூடான் ஜனாதிபதி பஷீர் டர்பூருக்கு திடீர் விஜயம்

கார்டூம், ஜூலை 24

சூடானிய ஜனாதிபதி ஓமர் அல் பஷீர் சட்டமும் ஒழுங்கும் சீர் குலைந்த டர்பூர் பிராந்தியத்துக்கான விஜயத்தை நேற்று புதன்கிழமை ஆரம்பித்தார். பேஹீர் விமான நிலையத்தை வந்தடைந்த ஜனாதிபதிக்கு அங்கு இராணுவ மரியாதை அளிக்கப்பட்டது.

டர்பூர் இனப்படுகொலைகள் தொடர்பாக அல்- பஷீரை கைது செய்வதற்கான பிடியாணையைப் பிறப்பிக்குமாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை பிரதம வழக்குத் தொடுநர் லூயிஸ் மொரினோ ஒதும்பே கோரிக்கை விடுத்துள்ள ஒரு தருணத்தில் ஜனாதிபதியின் விஜயம் இடம்பெற்றுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நடவடிக்கைகள் சூடானைக் கட்டுப்படுத்தப்படமாட்டா. அதனையோ அதன் முடிவுகளையோ சூடான் அங்கீகரிக்க மாட்டாது என, சூடானிய உப ஜனாதிபதி எலி ஒஸ்மான் தஹா இது குறித்துக் குறிப்பிட்டிருந்தார்.

சூடானிய ஜனாதிபதி தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் தவறானவை, புனைந்துரைக்கப்பட்டவை. இந்நீதிமன்றத்துக்கான ஒத்துழைப்பையும் சூடான் நிறுத்திக் கொள்ளும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அதேவேளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றப் பிரதம வழக்குத் தொடுநர் தாம் சுமத்தியுள்ள குற்றச் சாட்டுக்களில் சூடானிய ஜனாதிபதியின் தலைமையில் இனப்படுகொலைக்காக செயல்படும் அமைப்பால் டர்பூரில் 35 ஆயிரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்ற குற்றச்சாட்டு நடவடிக்கைகளை இடை நிறுத்தம் செய்து வைக்குமாறும் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முன்னெடுப்புக்கள் தடைப்பட்டு விடாதவாறு நீடிக்க உதவுமாறும் ஐ. நா. பாதுகாப்புச் சபையை ஆபிரிக்க ஒன்றியம் கேட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே சூடானிய ஜனாதிபதியின் டர்பூர் பிராந்திய விஜயமும் ஆரம்பமாகியுள்ளது என அவதானிகள் தெரிவித்துள்ளார்கள்.



## மெக்ஸிக்கோவில் கடத்தப்பட்ட 5 தென்கொரியரும் விடுதலை!

மெக்ஸிக்கோ, ஜூலை 24

மெக்ஸிக்கோ தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாகக் கடத்தப்பட்ட ஐந்து தென்கொரியர்களும் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என, தென் கொரிய வெளிவிவகார அமைச்சு நேற்று புதன்கிழமை தெரிவித்தது.

டெக்ஸாஸிலிருந்து அமெரிக்க எல்லையை ஊடறுக்கும் ரெப்னோஸா என்னுமிடத்தில், 8 நாட்களுக்கு முன்னர், இந்த ஐவரும் கடத்தப்பட்டனர். கடத்தல்காரர்கள் 30 ஆயிரம் டொலர்களைப் பணயப் பணமாகக் கோரியிருந்தார்கள் என்றும் தூதரகம் குறிப்பிட்டது.

ஐவரும் பாவிக்கப்பட்ட கார் விற்பனையில் ஈடுபட்டு வந்தவர்கள். இவர்கள் தங்களின் வர்த்தகம் தொடர்பாக, ரெப்னோஸா பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த போது கடத்தப்பட்டார்கள் என, உள்ளூர் ஊடகமொன்று தெரிவித்தது.

விடுவிக்கப்பட்ட ஐந்து பணயக் கைதிகளும் மெக்ஸிக்கோ பொலிஸாரால், தென் கொரிய உபதூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கவுள்ளார்கள் என்றும் இந்த ஊடகம் குறிப்பிட்டது.

## ஒபாமா ஜனாதிபதியானால் பாகிஸ்தானில் உள்ள அல்-குவைதா முகாம்கள் தாக்கியழிக்கப்படும்

### அவரே எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூலை 24

''பாகிஸ்தானில் உள்ள அல்- குவைதா முகாம்களை அந்த நாட்டு அரசு அழிக்காவிட்டால், அமெரிக்க இராணுவம் தாக்கி அழிக்கும். நான் ஜனாதிபதியானால் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் மீது தாக்குதல் நடத்தும்படி பாகிஸ்தானைக் கட்டாயப்படுத்துவேன். அப்படிப் பாகிஸ்தான் நிர்வாகம் நடவடிக்கை எடுக்காவிட்டால் பயிற்சி முகாம்கள் மீது நானே ஒருதலைப்பட்சமாகத் தாக்கி அழிக்க உத்தரவு கொடுப்பேன்.'' - இவ்வாறு அமெரிக்காவின் ஜனாதிபதி வேட்பாளர் பராக் ஒபாமா எச்சரித்திருக்கிறார்.

அவர் தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

பாகிஸ்தான் உதவி இல்லாமல் ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. பாகிஸ்தான் அமெரிக்காவிடம் இருந்து மிக அதிகமான அளவு உதவிகளைப் பெற்றுவருகிறது. இராணுவ உதவியும் பெற்று வருகிறது. எனவே அதற்குத் தெளிவான சமிக்ஞையைக் கொடுப்போம்.

ஆப்கானிஸ்தான் எல்லையோரத்தில் பாகிஸ்தானில் பழங்குடி இன மக்கள் பகுதிகளில் அல் - குவைதா பயிற்சி முகாம்கள் உள்ளன. இந்த முகாம்களைப் பாகிஸ்தான் அழித்து ஒழிக்க வேண்டும். நான் ஜனாதிபதியானால் பயிற்சி முகாம்கள் மீது தாக்குதல் நடத்தும்படி பாகிஸ்தானைக் கட்டாயப்படுத்துவேன். அப்படிப் பாகிஸ்தான் நிர்வாகம் நடவடிக்கை எடுக்காவிட்டால் பயிற்சி முகாம்கள் மீது நானே ஒருதலைப்பட்சமாகத் தாக்கி அழிக்க நடவடிக்கை எடுப்பேன்.

அமெரிக்கா பல தவறுகளைச் செய்துவிட்டது. பின்லேடனையும் அவரது கூட்டாளிகளையும் பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இருந்து நாம் நழுவி நம் பார்வையை ஈராக் பக்கம் திருப்பியது மிகப் பெரிய தவறு. அதற்கான விலையைத்தான் நாம் இப்போது கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். - இவ்வாறு ஒபாமா கூறினார்.

## ஈராக்கில் செய்தியாளர் சுட்டுக்கொலை

பக்தாத், ஜூலை 24

ஈராக்கில் குர்திஷ் பத்திரிகை ஒன்றில் பணியாற்றி வந்த சோரன் மாமாஹாமா (வயது- 23) என்பவர், கிர்குக் நகரில் ஆயுதம் தாங்கிய சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் தன் வீட்டுக்கு வெளியே இருந்தபோது இந்த கொலை நடந்துள்ளது.

கடந்த ஆண்டு அவருக்கு மிரட்டல் வந்தது. ஊடகத்துறையில் தொடர்ந்து நீடித்தால் கொல்லப்படுவாய் என்று அவருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டது என்று அவரது நண்பர் ஒருவர் கூறினார்.

ஈராக்கில் போர் தொடங்கியது முதல் அங்கு 130 செய்தியாளர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்தாரியின் பிரதம பாதுகாப்பு அதிகாரி அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத், ஜூலை 24

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தொண்டரும் அக்கட்சித் தலைவர் ஆஸிப் சர்தாரியின் பிரதம பாதுகாப்பு அதிகாரியுமான, காலித் ஷஹெறண்டஷா இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார் என, பொலிஸ் வட்டாரமும், கட்சி வட்டாரமும் தெரிவித்தன.

2007 ஆம் வருட டிசம்பரில், கட்சித் தலைவி பெனாஸிர் படுகொலை செய்யப்பட்ட சமயத்தில், இவர் பெனாஸிரின் பாதுகாவலர்களில் ஒருவராக இருந்தவர் என பொலிஸ் வட்டாரம் மேலும் குறிப்பிட்டது.

பிரதம பாதுகாப்பு அதிகாரி ஷஹெறண்டஷா, கூட்டமொன்றில் பங்குபற்றி விட்டு, நண்பரொருவருடன் தம்காரில் வீடு திரும்பினார். வீட்டுக்கு எதிரில் கார் நிறுத்தப்பட்டதும், நண்பர் இறங்கி வீட்டுக்குள் சென்றார். அப்போது காலித் காரை அருகிலுள்ள ஒழுங்கையில் நிறுத்த முனைந்தார். அப்போது துப்பாக்கிதாரிகளால் சுடப்பட்டார் என்ற தகவல்களும் வெளியாகியின.

பெனாஸிர் கொலை தொடர்பாக விசாரணை நடத்திய ஸ்கொட்லேண்ட்யார்ட் துப்பறியும் பொலிஸார் இவரையும் விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்

# கருணா அணி உறுப்பினர்கள் ஐவர் கல்லடிப் பொலிஸாரால் கைது!

## கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்பாம்!

மட்டக்களப்பு, ஜூலை 24

மட்டக்களப்பு, கல்லடிப்பகுதியில் கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர்கள் ஐவரை நேற்று முன் தினம் மாலை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் அப்பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்து சுமார் 7 லட்சம் ரூபா ரொக்கப்பணத்தையும் 15 பவுண் தங்க நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று வீட்டு உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்தே பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

பிரசாத் (வயது 22), சுபராஜ் (வயது 20), தினேஷ் (வயது 29), மகேந்திரராஜ் (வயது 23), கோணஷ் (வயது 21) என்பவர்களே கைது செய்யப் பட்டவர்களாவர்.

இவர்கள் ஐவரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

# இரத்தினபுரி, களுத்துறையில் புயல், கடும்மழை, வெள்ளம்!

கொழும்பு, ஜூலை 24

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் சீரற்ற காலநிலை காரணமாக இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் வெள்ள அபாயம் தோன்றியுள்ளது என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரத்தினபுரியில் நேற்று அதிகாலை திடீரென்று வீசிய பலத்த காற்றினால் 10 வீடுகள் சேதமடைந்தன. அத்துடன் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக இரத்தினபுரியிலுள்ள களுகங்கையின் நீர் மட்டம் 18 அடி உயர்ந்திருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இவற்றைத்தவிர றக்குவானை, கொடவத்த, உக்வத்த மற்றும் உடவத்தகல போன்ற பகுதிகளில் உள்ள மக்களின் குடிமனைகள் சிலவும் பலத்த காற்றினால் சேதமடைந்தன எனறும் அறியமுடிந்தது.

## பெருவிளையாட்டுகளில் முதலிடம், இரண்டாம் இடம் பெற்ற பாடசாலைகளுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட பெருவிளையாட்டுப் போட்டிகளில் 19 வயதுப்பிரிவில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வலயத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வரும்போது அணியின் பெயர் பட்டியலையும் எடுத்துவருமாறு யாழ்.மாவட்ட விளையாட்டுச் செயலாளர் க.குமாரசாமி கேட்டுள்ளார். (1)

## உரிய தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யவை வருமாறு:

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க எந்தவொரு பெரும்பான்மை இனத் தலைவர்களும் இதுவரை முயற்சிக்கவில்லை. 13 ஆவது அரசியல் திருத்தத்தின்படி கொண்டு வரப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பும் இந்த அரசின் தலையீட்டால் இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் ஊடாகவும் தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வை எட்ட முயற்சிக்கப்படவில்லை. இதன் இறுதி முடிவில் ஜனாதிபதிதான் ஆதிக்கம்செலுத்துவார்.

சர்வதேச சமூகம் இது தொடர்பில் நல்லதொரு முடிவை எதிர்பார்க்கின்றது.

தமிழர்களுக்கு உரித்தான சுயநிர்ணயம் வழங்கப்படவேண்டும் என்றே சர்வதேச சமூகம் கூறுகின்றது.

**சிங்கள மேலாதிக்க நிகழ்ச்சி நிரல்**

உரிய முறையிலான அதிகாரப் பகிர்வையே சர்வதேச நாடுகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. அதன் மூலம் தமிழரின் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், அவர்களுக்கு சுயநிர்ணயம் வழங்கப்பட வேண்டும் என்றும் அந்நாடுகள் கூறுகின்றன.

ஆனால், அதற்கான எந்தவித நடவடிக்கையையும் அரசு எடுக்கவில்லை. இனரீதியான - சிங்கள மேலாதிக்க அரசியல் நிகழ்ச்சி நிரலைத்தான் அது நடைமுறைப் படுத்துகின்றது.

வடக்கு - கிழக்கில் அரசு பேரழிவைத் தரும் நடவடிக்கையைத்தான் இப்போது முன்னெடுத்துச் செல்கிறது. இதன் மூலம் சர்வதேச சட்டங்களும் புறக்கணிக்கப் படுகின்றன.

தமிழ் மக்கள் இந்த நாட்டைச் சேராத மக்கள்போன்று நடத்தப்படுகின்றனர். நிச்சயமற்ற வாழ்க்கையையே தமிழர்கள் நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

தமிழர்கள் மீது தொடர்ந்து கிளைமோர்த் தாக்குதல்களும், பிரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் அவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். சிலர் நாட்டைவிட்டே ஓடுகின்றனர்.

பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு அரசு எந்த நிவாரணத்தையும் வழங்கவில்லை. ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்கள்தான் அவர்களுக்கு உதவுகின்றன.

**தமிழர்களை வெளியேற்றி இராணுவத்தினர் நிலை கொள்கின்றனர்**

எமது மக்கள் அகதி நிலையில் இருந்து விடுபட்டு கௌரவமான - நிம்மதியான - வாழ்க்கையை நடத்தவே விரும்புகின்றனர்.

தமிழர்கள் வெளியேற்றப்பட்டு அவர்களின் இடங்களில் இராணுவத்தினர் உள்ளனர். திருகோணமலையில் ஈச்சிலம்பற்று, பாட்டாளிபுரம், மூதூர் உள்ளிட்ட பல இடங்களில் இந்த நிலைமை உள்ளது.

இந்த மக்கள் வெளியேறக் காரணமாக அமைந்த அரசு இவர்களை மீளக் குடிய மர்த்த எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

புலிகள்உருவாவதற்கு முன்பு இருந்தே இந்த மக்கள் தங்களது இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

அவர்களின் வாழ் உரிமையைப் பறிக்கும் எந்த அதிகாரமும் இந்த அரசுக்குக் கிடையாது.

எல்லாம் சீராக இடம்பெற வேண்டும் என்றால் முதலில் இந்த யுத்தம் நிறுத்தப் படல் வேண்டும்.

யாரும் அவதானிக்காத நிலையில் மிகத் துரிதமாக கிழக்கில் சிங்கள மயமாக்கல் இடம்பெறுகிறது. இது தற்போதைய பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும். அரசு இவ்வாறான சிங்கள மயமாக்கத்தை உடன் நிறுத்த வேண்டும்.

**சிங்கள மயமாக்குவதற்காக கிழக்கில் புதிய வீதிகள்**

இச்சிங்கள மயமாக்கத்தை ஒட்டி கிழக்கில் புதிய வீதிகள் அமைக்கப்படுகின் றன. ஆனால், எமது மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் உள்ள பாதைகள் கவனிப்பா ரற்றுக் கிடக்கின்றன.

புலிகளை ஓரங்கட்டிவிட்டால் தமிழர்கள் மீது தாம் விரும்பிய தீர்வுத்திட்டத்தைத் திணிக்கலாம் என்றும், சிங்களவர்களின் கைகளை ஓங்க வைக்கலாம் என்றும் அரசு நினைக்கின்றது.

அரசின் இந்த எண்ணம் பிழையானது. நாம் எமது உரிமைக்காக 50 வருடங்களுக்கு முன்பே அமைதியான முறையில் போராடினோம். அதை சிங்களத் தலைவர்கள் நசுக்கியதால்தான் புலிகள் உருவாகினர்.

இந்தப் புலிகளை வெறுமனே குற்றஞ் சாட்டும் செயற்பாட்டில் அரசு ஈடுபட்டு வருகிறதே தவிர எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்கும் செயற்பாட்டில் ஈடுபடவில்லை.

உரிய அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டால் இராணுவத் தீர்வுக்கான தேவை ஏற்படாது.

தனிநாட்டுக் கோரிக்கை என்பது புலிகளின் கோரிக்கை அல்ல. அது தமிழ் மக்களின் கோரிக்கை. இக் கோரிக்கை புலிகள் உருவாவதற்கு முன்பிருந்தே முன்வைக்கப்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை அரசு உணரவேண்டும்.

தமிழர்களின் பிரச்சினை அபிவிருத்திப் பிரச்சினைதான் என்று அரசு பிழையாக விளங்கிக்கொண்டுள்ளது. தமிழர்களின் உள்ளக சுயநிர்ணயத்திற்குப் பிறகுதான் அபிவிருத்தி என்பதை எல்லோரும் விளங் கிக்கொள்ள வேண்டும்.

இந்த அரசால் தமிழர்களுக்கு உரிய அரசியல் தீர்வை வழங்க முடியாது விட்டால் அவர்களை அவர்கள் வழியில் செல்ல விட்டுவிட வேண்டும். உள்ளக சுயநிர்ணயத்தினை ஏற்று செயற்படும் பலம் தமிழர்களுக்கு உண்டு. - என்றார் சம்பந்தன். (அ)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தகநிலையத்திற்கு அருகில் வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று கூறப்பட்டது.

இவரது சடலம் வவுனியா வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. சுட்டுக்கொல்லப்பட்ட வர்த்தகர் முன்னாள் புளொட் உறுப்பினர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (சி)

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வடக்கு - கிழக்கு நிலைமை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வாவே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இந்த நாட்டை இரண்டாகப் பிரிக்க நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். இது எல்லோருக்கும் பொதுவான நாடு. வடக்கு - கிழக்கு தமிழர்களின் சுயநிர்ணயத்தை ஏற்று நாடு பிரிவதற்கு வழியமைத்துக் கொடுத்தால் அது நாட்டின் ஏனைய பகுதிகளையும் பாதிக்கும்.

தம்புல்லையில் உள்ள வேடுவர்களும் தனிநாடு கேட்பர். அக்குறணையில் உள்ளவர்களும் தனிநாடு கேட்பர். ஆகவே, நாட்டைப் பிரிக்காமல்தான் தேசிய பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

யுத்தத்தின் ஊடாகதமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க நாம் திட்டமிடவில்லை. யுத்தம் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்காக மாத்திரம்தான் பயன்படுத்தப்படுகிறது.

அதிகாரப் பகிர்வின் ஊடாகவே தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க நாம் முயற்சிசெய்து வருகிறோம். அதுவே எமது உறுதியான நிலைபாடும் கூட.

இன்று தமிழர்களைப் பாதுகாப்பது எமது அரசுதான். புலிகள் அவர்களது அடிப்படை உரிமைகளை நசுக்கியே வருகின்றனர்.

வடக்கிலிருந்து முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் விரட்டியடித்து பாரிய மனித உரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களும் ஈடுபட்டு வருபவர்களும் புலிகள்தான்.

ஆனால், அரசு என்றைக்குமே இவ்வாறான மனித உரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபட்டதில்லை. ஆகவே, இனவேறு பாடின்றி இந்த அரசுதான் மக்களைப் பாதுகாத்து வருகின்றது - என்றார். (அ-சி)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் ஊரடங்கு நேரத்தில் மாற்றம் செய்யப்படுவதாக தெரிவித்த அவர் -

இன்று இரவு ஊரடங்கு நடைமுறைக்கு கொண்டு வரப்படும் நேரம் நண்பகல் 12 மணிக்கு முன்னர் வானொலி மூலம் அறிவிக்கப்படும் என்று கூறினார். நேற்று மாலை 6.30 மணிக்கு பின்னரே, திடீரென ஊரடங்கு குறித்து படையினர் வீதிகளால் சென்றவர்களுக்குத் தெரிவித்தனர்.

மக்கள் பதற்றத்துடன் தமது பணிகளை இடைநடுவில் நிறுத்தி அவசர அவசர மாக வீடுகளை நோக்கி ஓட்டமும், நடையுமாக சென்றதைக் காண முடிந்தது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமையும் ஊரடங்கு நேரம் வழமையான இரவு 9 மணியில் இருந்து இரவு 7 மணிக்குக் கொண்டு வரப்பட்டதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

ஒரு திட்டவட்டமான நேர அட்டவணையும் இன்றி போதிய முன்னறிவித்தலுமின்றி ஊரடங்கு நேரத்தில் மாற்றம் செய்வதால் மக்கள் தமது நாளாந்த அலுவல்களை தேவைக் கேற்றவாறு பூர்த்திசெய்ய முடியாமல் உள்ளது. இவற்றைச் சுட்டிக் காட்டிய போதே, இனிமேல் இரவு நேர ஊரடங்கு நேரத்தில் மாற்றம் செய்யப்படும் போது போதிய முன்னறிவித்தல் வழங்கப்படும் என்று ஊடகப் பொறுப்பாளர் கூறி னார். (அ-1)

## காத்தான்குடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலம் மட்டக்களப்பு, போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் மட்டக்களப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## ஒரு லட்சத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றாக்குறையும் நிலவுவதாக அங்குள்ள அரச அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

**மழையால் மேலும் அவலம்**

கிளிநொச்சிப் பிரதேசத்தில் பல நாள்களாக மழை பெய்து வருவதால், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வருவோர், மர நிழல்களில் தங்கியிருப்போர் பெரும் அவலங்களை எதிர்நோக்குகின்றனர். மிகப் பலரும் சேற்றுக்குள்ளேயே உணவு சமைத்தும் சேற்றிலேயே உறங்கியும் நாள்களை கழித்து வருகின்றனர்.

**கிளிநொச்சி, முல்லைத்தீவில் பெரும் பதற்றமான நிலை**

இதேவேளை-

இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பாதுகாப்பு நிலையற்றதாகவும் நிச்சயமற்றதாகவும் பதற்றமாகவும் உள்ளதாக ஐக்கிய நாடுகளின் முகவர் அமைப்புகள் தமது பிந்திய (வாராந்த) அறிக்கையில் தெரிவித்துள்ளன.

மல்லாவியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் பெரும் எண்ணிக்கையானோர் அக்கராயனிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)


2008 இல் க.பொ.த [சா.தா] பரீட்சைக்கு
முதன் முதலாக தோற்றவுள்ள மாணவர்களுக்கான
முன்னோடி வினாத்தாள்கள் விடையுடன்
(55)
(வினாப்பத்திரங்களையும் விடைகளையும் உள்ளடக்கியது)
★ தமிழ்மொழி
★ விஞ்ஞானம்
★ கணிதம்
★ வரலாறு
★ ஆங்கிலம்
O/L
2008
புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைவான துறைசார் தேர்ச்சி பெற்ற கொழும்பு பிரபல ஆசிரிய ஆலோசகர்களால் தொகுக்கப்பட்டது.
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மாபெரும் கருத்தரங்கு
பௌதிகவியல்
★ அச்சிடப்பட்ட பாடச் சுருக்கம்
★ எதிர்பார்ப்பு வினாக்களும் விடைகளும்
★ பிரபல பாடசாலைகளின் வினாத்தாள்களின் தொகுப்பு
காலம்:- 25.07.2008 வெள்ளி 8மணி
By.K.Selvan
NAVALAR Jaffna.

வீடு வாடகைக்கு
இணுவில் மத்தியில் சகல வாகன போக்குவரத்து வாகனதரிப்பு வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. சௌக்கிய சேவை, அல்லது கல்விச்சேவை திணைக்களத்தைச் சேர்ந்த சிறிய குடும்பம் விரும்பத் தக்கது.
தொடர்பு:- (நேரில்) இ.சட்டநாதர் (காசாளர், அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்.)
தொலைபேசி 077 4545598, 077 5283375
(அதிகாலை:- 4-6 வரைமட்டும்.)

முன்னோடி
வினாக்கள் - விடையுடன்
தரம் 10
மேல்மாகாணத்தில் நடைபெற்ற மாதிரிப் பரீட்சை வினாக்கள் விடையுடன் தொகுக்கப்பட்டுள்ளது.
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அரசியல் பாட கருத்தரங்கு
A/L 2008
இன்றும் ஞாயிறும்
9 a.m - 2 p.m
முன்னணி ஆசிரியர்கள் ஒன்றிணைந்து வழங்குவர்.
DMI
நாவலர் வீதி, யாழ்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org